# இந்திய லோகசபை சபாநாயகராக தில்லோன் ஒருமனதாக தெரிவு

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 178
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் ஆடி 25 ஜ: அவ் 24 சனிக்கிழமை [9-8-69]

புதுடில்லி, ஆகஸ்ட் 8

**இந்திய ஆட்சிமன்றத்தின் லோக் சபை சபாநாயகர் பதவிக்கு திரு. ஜி. எஸ். தில்லோன் ஒருமனதாக இன்று தெரிவுசெய்யப்பட்டார்.**

லோகசபை சபாநாயகராகவிருந்த திரு. சஞ்சிவரெட்டி ஜனாதிபதி பதவிக்குப்போட்டியிடுவதற்காக சபாநாயகர் பதவியை ராஜினாமா செய்ததால் அந்த இடத்துக்கு இன்று தேர்தல் நடைபெற்றது.

லோகசபை சபாநாயகர் தேர்தல் ஒருசில நிமிடங்களில் முடிவுற்றது. திரு. தில்லோனின் பெயரை ஆட்சிமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு, கே. ரகுராமையா முன்மொழிந்தார். திரு. விபூதிமித்ரா வழிமொழிந்தார். அதன்பேரில் திரு, தில்லோன் ஒருமனதாக சபாநாயகர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

ஆளும்கட்சியின் சபைத் தலைவரான பிரதமர் இந்திரா காந்தியும் எதிர்க்கட்சியில் மிகப்பெரிய கட்சியான சுதந்திராக்கட்சித் தலைவர் என். ஜி. ரங்காவும், திரு. தில்லோனை சபாநாயகர் ஆஸனத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது சபையின் இருதரப்பினரும் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியைத்தெரிவித்தனர். சபாநாயகர் தெரிவுக்கு துணை சபாநாயகர் திரு. காடில்கர் தலைமை வகித்தார்.

திருமதிகாந்தி பேசுகையில் சபையின் மிகப்பெரிய பதவிக்கு திரு. தில்லோன ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியாகவிடுக்கிறது என்றார். சபாநாயகர், கட்சி அரசியலுக்கோ, மற்றவேற்றுமைகளுக்கோ அப்பாற்பட்டவர். பல்வேறு விஷயங்கள் சபையில் சாங்கோபாங்கமாக ஆராயப்படும்போது உணர்ச்சிக்கொந்தளிப்புகள் ஏற்படலாம். இந்தசமயங்களில் அமைதியைப் பேணிப் பாதுகாக்க இருதரப்பிலும் கூட்டுமுயற்சிகள் அவசியம் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

திரு. தில்லோன் ஒருவழக்கறிஞர் இவருக்கு 55 வயதாகின்றது. சட்டத்துறையில் போலவே அரசியல், பத்திரிகைத் தொழிலிலும் இவர் சிரத்தை கொண்டவர்.

# இந்திராவைகொலைசெய்யசதி?

## ஆனால் விசேஷ பாதுகாப்பு வேண்டாம் என்கிறார் அவர்

புதுடில்லி, ஆகஸ்ட் 8

**இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை கொலை செய்யப் போவதாக பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்துள்ளன. இத்தகவல் இன்று லோகசபையில் தெரிவிக்கப்பட்டது. பிரதமருக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் ஓர் அங்கத்தவர் இங்கு கேட்டுக் கொண்டார்.**

14 வங்கிகள் தேசிய உடைமையாக்கப்பட்ட பின்னர் இச்சம்பவம் இங்கு நடந்துள்ளது. அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யார் தான் தம்மைப் பயமுறுத்தினாலும் தாம் பயப்படப்போவதில்லை என்றும் நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய சகல அலுவல்களையும் தாம் மேற்கொள்ளவிருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமருக்கு முன்னரே தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. சவான் லோகசபையில் தெரிவித்தார்.

## 'சமயப்பணிகளுக்காக பெரும் தொண்டாற்றினார்'

### உருவப்படம் திரைநீக்க வைபவத்தில் நீதியரசர்

யாழ்ப்பாணம், சனி

வழக்கறிஞரின் மகனாகப் பிறந்து பிரபல வழக்கறிஞரிடம் பயிற்சிபெற்று படிப்படியாக தமது தொழிலில் முன்னேறி முடிக்குரிய வழக்கறிஞராகவும் கடமையாற்றி, திரு. முத்துசாமிப்பிள்ளை தமது வாழ்நாளில் சமய பணிகளுக்கு பெரும் தொண்டாற்றியதன் மூலம் வாழ்க்கையில் பூரண நிறைவையடைந்து விட்டார்.

யாழ்ப்பாணம் சட்டநூல் நிலையத்தில், காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. ரி. முத்துசாமிப்பிள்ளையின் உருவப் படத்தை திரை நீக்கம் செய்துவைத்துப்பேசிய நீதியரசர் ஒ எல். டி கிரெஸ்டர் மேற்கண்டவாறு கூறினார்.

வழக்கறிஞர் திரு. ஏ. வி. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் நீதியரசர் கிரெஸ்டர் மேலும் கூறியதாவது: நான் நீதிபதியாகக் கடமையாற்றியபோது அவரின் ஆற்றலை நன்குஅறியக்கூடியதாக இருந்தது. வழக்குகளை திறமையைக் காணக்கூடியதாக இருந்தது அவர் கல்வி பயின்ற பாடசாலையிலேயே கடமையாற்றி அப்பாடசாலைக்கமிட்டிக்கும் தலைவராகக் கடமையாற்றினார். தமது வாழ்நாளில், சமய சேவைக்காக அதிகம் பாடுபட்டிருக்கிறார்.

வழக்கறிஞர் திரு. ஏ வி. குலசிங்கம் கூறியதாவது: என்னை தமது சிரேஷ்டவழக்கறிஞராக கொண்டு பயிற்சி பெற்ற திரு. முத்துசாமிப் பிள்ளை எனது சகோதரனாகவே விளங்கினார். என்னிடம் பயிற்சிபெற்ற போதும் பல தடவை அவர் எனக்கு எதிர்ப்பக்கத்திலிருந்து வாதாடியிருக்கின்றார். தமக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டு வழக்குகளில் சிறந்தமுறையில், அமைதியான நிலையில்வாதாடுவார் அவரது திறைமையும் ஆற்றலும் போற்றத்தக்கது சமயப்பணிகளில் அரும் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்.

புறக்டர் ரி. சங்கரப்பிள்ளை நன்றியுரை கூறினார்.

## வேலை நிறுத்த முயற்சி

கோட்டை, வெள்ளி

தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கோரி பொது வேலை நிறுத்த மொன்றை நடத்த தனியார் துறை தொழிற் சங்கங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

## கொக்குவில் கி.ச உபதலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் கிராமசபை உபதலைவர் தெரிவுக்காக நடந்த சபையின் விசேஷ கூட்டத்தில், திரு. சி. கனகரத்னம் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்ய

## இந்திய வம்சாவழியினரும் சீவல் தொழிலும்

கோட்டை, வெள்ளி

''இலங்கையர் அல்லாத இந்திய வம்சாவழி சீவல் தொழிலாளர், தொடர்ந்து சேவையில் இல்லாதிருந்தாலும் இடையிடையே சேவையில் ஈடுபட்டிருந்தாலும் கூட, அவர்கள் இந்திய வம்சாவழி சீவல் தொழிலாளர்கள் 1954-ம்ஆண்டிலிருந்து, தொடர்ந்து இலங்கையில் சீவல்தொழிலில் ஈடுபடாது விட்டிருந்தாலும், அவர்கள் இடையிடையே சேவையில் ஈடுபட்டிருந்தாலும்கூட, அவர்கள் இலங்

மாவை ஆதீனகர்த்தாவை

## தடைசெய்யக் கோரி மனுக்கள் தாக்கலாகலாம்

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் கடந்தகாலங்களில், உள் வீதிக்குள் சென்று வணங்கியதுபோல், இம் முறையும் உள்ளே சென்று வணங்குவதற்கு, தடுக்கக் கூடாதென, மாவிட்டபுரம் ஆதீனகர்த்தாவை தடைசெய்யக் கோரி, இன்றுயாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த நால்வர் மனுக்கள் சமர்ப்பிப்பார்களென்று அறியப்படுகிறது.

ஏற்கனவே பெரும்பான்மைச்சமூகத்தை சேர்ந்த மூவர், தாக்கல் செய்தமனுவின்படி அவர்களை தடுக்கக் கூடாதென மாவட்ட நீதிபதி இடைக்கால தடைஉத்தரவுவழங்கியுள்ளார். இந்த தடை உத்தரவுகட்டளைகளை நேற்றுமுன்தினம், மாவிட்டபுரத்திற்கு பிஸ்கால் கொண்டு சென்றதாகவும், கட்டளைகள்உரியவர்களிடம் இதுவரை கொடுக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## கரையூர் கொலை முயற்சி வழக்கில் 600 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், சனி

கரையூர் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 600 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. விசாரணை நடுவில் எதிரி கடும்காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து நீதியரசர் எதிரிக்கு 600 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர்திரு. ஒ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 68-ம் ஆண்டு ஜனவரி 24-ம் திகதி கரையூரில் செபஸ்தி அல்போன்சோ என்பவர் சவரிமுத்து சிறில் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்ப்பில் அட்வகேட் ஜே. ஏ. பி. செரிபிம், புறக்டர் ஜே. ஐ. ராஜரத்தினம் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் பி. பரிராஜா ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பிரியாந்த பெரேரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை இம் மாதம் 13-ம் திகதி வரை ஒத்திபோடப் பட்டுள்ளது.

## சந்திரனுக்கு விண்கலம் ரஷ்யா அனுப்பியது

மாஸ்கோ, ஆகஸ்ட் 8

சந்திரனுக்கு ஆளில்லாத விண்வெளிக் கலமொன்றை இன்று ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது.

சொண்ட்-7 என்ற இந்த விண்கலம் சந்திரன் பற்றி துணுக்கமாக ஆராயக் கூடிய படங்களை பூமிக்கு அனுப்பி வைக்கும் என சோவியத் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சொண்ட்-7 இன்று அனுப்பப்பட்ட செய்தியை சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ்' அறிவித்தது.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் 4-ம்திருவிழாவாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7.30 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தேவிமகாத்மியம் பிரசங்கத் தொடரில் ''அகிலாண்டேஸ்வரி'' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் நிகழ்த்துவார். இரவு 7-30 மணிக்கு இரவு உற்சவமும் பின்னர் சுவாமி யானைவாகனத்தில் திருவீதிஉலாவுதலும் நிகழும்.

வங்கி

அதிகாரிநிமாண்டில்

விஞ்ஞான மாணவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற இவ்வைபவத்தில் நீதியரசர் கிறெஸ்டர் மேலும் கூறியதாவது: நான் நீதிபதியாகக் கடமையாற்றியபோது அவரின் ஆற்றலை நன்குஅறியக்கூடியதாக இருந்தது. வழக்குகளை கவனமாக படிப்பதிலும், வாதாடுவதில், ஊக்கம் காட்டுவதிலும் அவர் அவரது திறைமையும் ஆற்றலும் போற்றத்தக்கது சமயப்பணிகளில் அரும்பெரும் தொண்டாற்றியிருக்கிறார்.

புறக்டர் ரி. சங்கரப்பிள்ளை நன்றியுரை கூறினர் தேநீர் விருந்தும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் கிராமசபை உபதலைவர் தெரிவுக்காக நடந்த சபையின் விசேஷ கூட்டத்தில், திரு. சி. கனகரத்னம் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆண்டுவிழா

வேலணை, வியாழன்

யாழ். திரு நெல் வேலி சைவ முன்னேற்றக்கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது.

கோட்டை, வெள்ளி

''இலங்கையர் அல்லாத இந்திய வம்சாவழி [illegible] தொழிலாளர், தொடர்ந்து சேவையில் இல்லாதிருந்தாலும், இடையிடையே சேவையில் ஈடுபட்டிருந்தாலும் கூட, அவர்கள் தொடர்ந்து. அவர்களின் கால எல்லை வரை இங்கிருந்து சீவல் தொழிலில் ஈடுபட முடியும்.''

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட மரவரி கமிஷனர் திரு எஸ். எச். எஸ். விஜயசூரியா கொழும்பு மதுவரிஆணையாளர் அலுவலகத்தில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

''இலங்கையிலுள்ள, இலங்கையர் அல்லாத, இந்திய வம்சாவழி சீவல் தொழிலாளர்கள் 1954-ம்ஆண்டிலிருந்து, தொடர்ந்து இலங்கையில் சீவல்தொழிலில் ஈடுபடாது விட்டிருந்தாலும், அவர்கள் இடையிடையே சேவையில் ஈடுபட்டிருந்தாலும்கூட, அவர்கள் இலங்கையில் இருக்கும்வரை தொடர்ந்து சீவல் தொழிலில் ஈடுபடலாம்.'' என்று அண்மையில் கொழும்பு மதுவரி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்துசீவல் தொழிலில் ஈடுபடாதஇந்தியவம்சாவழி சீவல் தொழிலாளர்கள்,மேலும் இத்தொழிலில் ஈடுபடுவதை தடை செய்ய வேண்டும் என்று புதிய தொருஅறிக்கை வெளியானதைத் தொடர்ந்தே இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (ம.நி)

இன்று ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது.

சொண்ட்-7 என்ற இந்த விண்கலம் சந்திரன் பற்றி துணுக்கமாக ஆராயக் கூடிய

ளனர்.

சொண்ட்-7 இன்று அனுப்பப்பட்ட செய்தியை சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ்' அறிவித்தது.

நிகழ்த்துவார். இரவு 7-30 மணிக்கு இரவு உற்சவம்மும் பின்னர் சுவாமி யானைவாகனத்தில் திருவீதிஉலாவுதலும் நிகழும்.

'கட்டட வேலைக்கு ரூ. 32 லட்சம்

# மகாதேவாபாலப் பிரச்னையை ஆராய மாநாடு.கூட்டவும்'

## பிரதமரிடம் கிளிநொச்சி எம். பி.

யாழ்ப்பாணம், சனி

மகாதேவாபாலம் அமைக்கும் திட்டத்துக்கென ரூபா 32 லட்சம் நடப்பு வருட நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972ம் ஆண்டுக்குள் பாதைவேலை முடிக்கப்படும் என்ற குறிப்பும்அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சு கைத்தொழில் அமைச்சு, பொதுவேலைப்பகுதி அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்கள தலைவர் அடங்கியமகாநாடொன்றைக் கூட்டி இது பற்றி ஆலோசனை நடத்தி உடனடியாக வேலை ஆரம்பிக்கும்படி கேட்டுக் கொள்ளும் கடிதமொன்றை கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் காபொ. இரத்தினம் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்காவுக்குஅனுப்பிவைத்துள்ளார்.

மகாதேவா பாலம் மூடுவதால் உப்புக்கூட்டுத்தாபனத்துக்கு அதிக நஷ்டம் ஏற்படுமென்றும் வேலைகள் பாதிக்குமென்றும் கூட்டுத்தாபனம் ஆட்சேபனை தெரிவித்திருந்தது தெரிந்ததே.

## மேலும் இரு வழக்குகள்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி அசைஸ் விசாரணை இம் மாதம் 13-ம் தேதி முதல் நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெறும். நீதியரசர் ஓ. எல். டி. கிரேஸ்டர் முன்னிலையில் நடந்த விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்தன.

அசைஸ் விசாரணைக்கு மேலும் 2 கொலை வழக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சண்டிலிப்பாய் கொலை வழக்கு, கிளாலி கொலை வழக்கு ஆகியவை புதிதாக சேர்க்கப்பட்ட வழக்குகளாகும்.

# மடுமாதா திருநாள்: பக்தர்கள் திரளுகின்றனர்

## விசேட பஸ்சேவை ஒழுங்கு

நல்லூர், சனி

மருதமடு திருப்பதியில்தேவமாதாவின் ஆரோகணத் திருநாள் இம்மாதம் 15-ந் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதற்கு ஆயத்தமாக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன.

சுமார் பதினையாயிரத்துககுமதிகமான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து சேர்ந்துள்ளனர். கூடிய விலைக்குப் பொருட்களை விற்கா வண்ணம் தடுப்பதற்கும் சுகாதாரம் சம்பந்தமான விடயங்களைக் கவனிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆராதனைகள் முடிந்த பின்பு இரவு 11 மணிக்குப் பின்பு மடுத்திருப்பதியில் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. களவுகள் மற்றும் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறுதவாறு பாதுகாப்பதற்காகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன.

நாட்டின் பிரதான புகையிரத நிலையங்களிலிருந்தும் மடுத்திருப்பதிக்குபஸ் இணைப்புச் சேவைகள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணப் புகையிரதங்களில் வரும் யாத்திரிகர்கள் வவனியா புகையிரத நிலயத்திலிருந்து பஸ்ஸில் செல்லக் கூடியதாக இணைப்புச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மடுத்திருப்பதிக்குச் செல்லும் யாத்திரிகர்களின் பிரயாண வசதிக்காக சுமார் 20 இ.போ.ச. பஸ்கள் வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவிக்கப்பட்டுள்ளன யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து நேற்றுத் தொடக்கம் பஸ்கள் மடுத்திருப்பதிக்கு சேவையிலீடுபட்டுள்ளன. 15-ந் திகதி நடைபெறும் பெரிய பாடற்பூசை மேற்றிராணி ஆண்டகைகளால் நிறைவேற்றப்படும்.

## அமெரிக்கஉதவி

கோட்டை, சனி

விவசாயத்துறை விருத்திக்கு உதவும் வகையில் அமெரிக்கா இலங்கைக்கு 3 கோடி ரூபா பெறுமதியான உரம் வழச்க முன்வந்துள்ளது.

## வங்கி அதிகாரிறிமாண்டில்

வவனியா, வெள்ளி

வங்கி உதவி அதிகாரி ஒருவரின் மரணம் சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த திரு. சண்முகநாதன் என்ற அதிகாரி கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## சட்ட வைத்திய அதிகாரி இடமாற்றம்

நல்லூர், சனி

சுகாதார அமைசின் உத்தரவின் மீது யாழ்ப்பாண சட்டவைத்திய அதிகாரியக் கடமையாற்றி வந்த டாக்டர் ஞானசுந்தரம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதியில் டாக்டராகக் கடமையாற்றுவதற்கு மாற்றப்பட்டுள்ளார்.

டாக்டர் பாலசிங்கம் சட்டவைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

விஞ்ஞான மாணவர்

# தமிழில் பரீட்சை எழுத சலுகை

கொழும்பு, வெள்ளி

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்விபெறும்தமிழ் மாணவர்கள் பரீட்சைகளின்போது தமிழ் மொழியிலேயேவிடைகளை எழுதலாம் ஆனல் தமிழில் விடையெழுதவிரும்பும் மாணவர்கள் முன் கூட்டியே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துவிடவேண்டும்.

தேசிய உயர்கல்விசபை இந்தமுடிவைசெய்திருக்கின்றது.

விஞ்ஞானப்பாடபோதனைகள் ஆங்கிலமொழியிலேயே நடைபெறும் வழமைபோல் பரீட்சை எழுதுகிறவர்கள் ஆங்கிலத்திலேயே விடைகளை எழுதவேண்டும். ஆனல் தமிழில் பரீட்சை எழுத விரும்பும்மாணவர்கள் முன் கூட்டியேஅறிவித்தால் அவர்களுக்கு இந்தச்சலுகையை அளிப்பதற்கு தேசிய உயர் கல்விசபை முடிவுசெய்திருக்கின்றது.

# தம்பதிகளுக்கு றிமாண்ட்

நல்லூர், சனி

பதினெருவயதுடைய வேலைக்காரச் சிறுமிக்கு அடித்துக்காயம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மன்னுரைச் சேர்ந்த தம்பதிகள் இருவர் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

சிறுமியான பாக்கியம் என்பவரை பலதடவைகள் அடித்துக்காயப் படுத்தியதாக திரு. சத்தியாநந்தன் என்பவர் மீதும் அவரது மனைவிமீதும் மன்னார்பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மன்னார் மாஜிஸ்திரேட்திரு. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட போது மாஜிஸ்திரேட் இருவரையும் றிமாண்டில்வைக்குமாறு உத்தரவிட்டார்.

இது சம்பந்தமாக மன்னார் பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

''வேலையற்ற

# பட்டதாரிகளுக்கு மாதாமாதம் ரூபா 100 வழங்க வேண்டும்''

கோட்டை, வெள்ளி

வேலை கிடையாதிருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும்வரை மாதாமாதம் வாழ்க்கைப்படியாக நூறு ரூபா அரசாங்கம் வழங்கவேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றைக் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் நவம்பர் மாதம் 4-ம் திகதி ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

வேலை கிடையாதிருக்கும் பல்கலைக் கழக பட்டதாரிகளுக்கு வேலைகொடுக்க அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்காமலிருப்பதால் இச்சலுகை1-10-69தொடக்கம் அவர்களுக்கு அரசாங்கம் வழங்கவேண்டுமென தமது பிரேரணையில் திரு கா.பொ.தெரிவித்துள்ளார்.

இ. போ. ச. பஸ்கள் நேர அட்டவணைப்படி ஓடாமையால் இந்நாட்டு மக்கள் பஸ்களுக்காக காத்துநின்று பெரும் கஷ்டப்படுவதுடன், உழைக்கும் நேரத்தினையும் வீணுக்கவேண்டி ஏற்படுவதாகவும், இதற்கு 3 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் திரு. கா. பொ. இரத்தினம் நவம்பர் 4-ம் திகதி ஆட்சிமன்றத்தில் கேட்கவிருக்கிறார்.

இ. போ. சபையின் பணிகள் பிரதேச அடிப்படையில் பரவலாக்கப்படுவதன் மூலம் இ. போ. சபை நல்ல முறையில் மக்களுக்குச் சேவைசெய்யமுடியும் என்றும், சீரானசேவையை இ. போ. சபை நடாத்துகற்கு இதுவே முதற்காரணம் என்றும் கிளிநொச்சி எம். பி. ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணையில் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் இ. போ. ச. கிளைகளை நிறுவி, பணிகள் யாவற்றினையும் மாகாண அடிப்படையில் பிரித்துக்கொடுக்க அரசாங்கம் இவ்வாண்டு முடிவுக்குள் நடவடிக்கை எடுக்கிம்படியும் அவர் கேட்கவிருக்கிறார்.

# ஜி. சி. ஈ.சாதாரண பரீட்சை ஒன்றரை லட்சம் பேர்சித்தி

## தனிப்பட்ட பரீடசார்த்திகளின் பெறுபேறுகள் இன்று கிடைக்கும்

கோட்டை, சனி

நேற்று வெளியான ஜி.சி ஈ சாதரண பரீட்சை பெறுபேறுகளில் சுமார் ஒன்றரை லட்சம் பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளனராம். இவர்களுள் சுமார் 50,000 பேர் உயர்கல்விக்குத் தகுதியுடையவர்களாக உள்ளனர்.

கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து விஞ்ஞானப் பாடங்களில் தோற்றிய பெரும்பான்மையான மாணவர்கள் சித்தியடையவில்லை என்றும் நகரப்பாடசாகளிலிருந்து தோற்றிய மாணவர்கள் இதே பாடங்களில் நன்ருக தேறியுள்ளனர் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோன்றிய 285,000 மாணவர்களில் சுமார் 150,000 பேர் சித்தியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.முடிவுகள் இம்முறை நல்லனவாகவே இருத்தது ாக கூறப்பட்டது.

நேற்று முன்தினம் வெளியான பெறுபேறுகள், சகல தனிப்பட்ட பரீட்சார்த்களுக்கும் இன்று கிடைக்கும்.

## இ.போ.ச தலைவர் கோரிக்கை

கோட்டை, சனி

இ.போ.சபை புதிய பஸ்களை வாங்கி போக்குவரத்தை சீராக நடத்துவதற்கு வகைசெய்யுமுகமாக 3 கோடி ரூபாவரையான அன்னிய செலாவணி ஒதுக்கித்தருமாறு இ போ.ச தலைவர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

பதிய பஸ்களை வெளிநாடுகளிலிருந்து வருவிக்கவே இவ்வாறு அவர் கோரியுள்ளார்'

அடுத்த ஆண்டிலிருந்து பஸ்சேவை சீராக இயங்குமென அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார.

## கேரள முதலமைச்சர்

திருவனந்தபுரம், சனி

கேரள முதலமைச்சர் திரு சி.எம்.எஸ். நம்பூதிரிபாட் சுகவீனம் காரணமாக இன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

# புதைக்கப்பட்ட சடலம் பற்றி விசாரணை

வவனியா வெள்ளி

முல்லைத்தீவு தண்ணீரூற்றை சேர்ந்த ஒரு வயோதிப மாதின் சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு விசாரணை செய்யப்படவிருக்கிறது.

ஓர் இளம்பெண்ணை ஒரு வீட்டில் கொண்டுவைத்து விட்டு கதிர்காமம் சென்ற இளைஞன் திரும்பி வருவதற்கு முன்னர் இருவர் அந்த வீட்டுக்குச் சென்று பலாத்காரம் செய்ய முயன்றதாகவும் கதவை உடைத்து உட்பிரவேசித்த போது மூதாட்டியின் மீது மிதித்து மரணம் விளைவித்ததாகவும் அந்த இளம்பெண் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

# 'தனியர்துறை ஊழியருக்கு கட்டாயக்காப்புறுதி'

கோட்டை, வெள்ளி

தனியார் துறை ஊழியர்கள் சகலரும் கட்டாயக்காப்புறுதிசெய்யப்படவேண்டும் என்று கூறும்நகல் மசோதா ஒன்றை சமூகசேவைப்பகுதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடமையிலிருக்கும் போது ஏற்படும் காயங்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

புகைப்படக்கலைப் பயிற்சி வகுப்புகள்; மாணவர்களே உங்கள் விடுமுறை தினங்களை, இன்பமாகக்கழியுங்கள். புகைப்படக்கலை நுணுக்கங்களைப் பயில உங்களுக்கு ஆவலாக இருக்கிறதா? எமது புகைப்பட ஸ்தாபனத்துடன் நேரில் தொடர்பு கொண்டு அங்கத்தவராகச் சேருங்கள். பிறின்ஸ் ஸ்ருடியோ, 50, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1302

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் பிரபல்யமான ஸ்தாபனத்திற்கு ஆங்கில, தமிழ் தட்டச்சு தெரிந்தவரும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு கொள்ளக்கூடிய வருமான பெண் லிகிதர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1299, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1299


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 9—8—69

(காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00 செய்தி அறிக்கை)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நாதஸ்வரம், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம் 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் பாடல், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வயலின் இசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## நாடக விழா

சுழிபுரம், வெள்ளி

பெரிய விளான் இலங்கேஸ்வரி நாடக மன்றத்தினர்

# ''சந்திரனில் விளையாட்டு போட்டி நடக்கவேண்டும்''

## வடகுதி அரசாங்க அதிபரின் ஆசை

புத்தூர், வெள்ளி

வட மாகாண அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் பிரான்ஸிஸ் தனது ஆசையொன்றை வெளியிட்டார்.

நீர்வேலி இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற வலிகாமம் கிழக்கு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

''சந்திரனில் காலடி எடுத்துவைத்த மனிதரைப் போல இங்கு வேஷமிட்டு, விநோத உடைப் போட்டியில் கலந்துகொண்டதைப் பார்த்தேன். சந்திரனில் இங்குள்ள விளையாட்டுக் கழகங்கள் போட்டியொன்றை நடத்தப்போகும் நாளையே நான் எதிர்பார்க்கிறேன்'' என்று திரு. பீட்டர்ஸ் கூறினார்.

இப்படியான ஆர்வத்தை இங்கு நான் பார்க்கும் போது நிச்சயம் என் ஆசை நிறைவேறும் என்றே எண்ணுகின்றேன் என்றும் அரசாங்க அதிபர் கூறினார்.

கடந்த இரண்டு வருடங்களாக இங்கு இப்போட்டிகள் நடைபெறுவதைக் குறிப்பிட்ட அரசாங்க அதிபர், மேலும் இவ்விளையாட்டுக்களை ஒழுங்குசெய்தவர்களையும், பங்குபற்றிய வீரர்களையும் பாராட்டினார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். வலி. கிழக்குக் காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## விளையாட்டு விழா

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு விளையாட்டுக் கழகங்களின் இரண்டாம் பிரிவு சங்கங்களின் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 17, 18, 19ம் திகதிகளில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. 15ம் திகதி மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், பெண்கள் சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன. இறுதிநாள் விழாவின்போது கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

......

## தொண்டர்படை

கோப்பாய், வெள்ளி

கல்வியங்காடு ஸ்ரீ ஞான

## முதலிடம் பெற்றார்

வெள்ளவத்தை, வெள்ளி

இலங்கை கல்விப்பகுதியினர் நடாத்திய கல்வி நூற்றாண்டு விழா 'சியவச' கட்டுரைப் போட்டிக்கென கொழும்புவட்டாரத்தமிழ்ப் பாடசாலைகள் மத்தியில் நடைபெற்ற தமிழ்க் கட்டுரைப் போட்டியில் வெள்ளவத்தை சென்ற் கிளேயர்ஸ் பாடசாலையைச் சேர்ந்த செல்வி சுபத்திரா கதிர்காமத்தம்பி முதலிடம்பெற்றார்.

......

## கரம்பொன் ம.வி. விளையாட்டுப்போட்டி

ஊர்காவற்றுறை, சனி

கல்வி ஆலோசகர் திரு. எஸ். விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற கரம்பன் மகாவித்தியாலயப் போட்டியில், விவேகானந்தா. சர்வானந்தா, மகாதேவா ஆகிய இல்லங்கள் கலந்துகொண்டன. மகாதேவா இல்லம் சாம்பியனானது.

விவேகானந்தா இரண்டாவதாகவும், சர்வானந்தா மூன்றாவதாகவும் வந்தன. தீவுப்பகுதிக் கல்வி அதிகாரி திரு அ. சி. நல்லையா விளையாட்டு வைபவத்தை ஆரம்பித்துவைத்தார். தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டார். திருமதி நவரத்தினம் பரிசுகளை வழங்கினார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் மாவட்டஅரசாங்க இலாகாக்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், காரைநகர் கடற்படைக் கோஷ்டி காங்கேசன்துறை சீமெந்து கூட்டுஸ்தாபனக் கோஷ்டியை 6 1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

காங்கேசன்துறைசீமெந்துக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டி - யாழ். மாநகரசபைக் கோஷ்டியை 3-0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. சற் சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

...... (தே-நி)

## கத்தி வெட்டு

அளவெட்டி, வெள்ளி

குரும்பசிட்டியைச்சேர்ந்த கதிரன்கணபதி என்பவருக்

## இரு கோஷ்டிகள் கலந்து கொள்ளும்

யாழ்ப்பாணம், சனி

கல்விநூற்றாண்டுவிழாவை முன்னிட்டு அநுராதபுரத்தில் நடைபெறும் உதைபந்தாட்டக் கண்காட்சி விழாவில் பங்குபற்றுமாறு யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் இரு சனசமூக நிலையக்கோஷ்டிகளுக்கு அநுராதபுரம் காரியாதிகாரியினரால் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பை ஏற்று றெக்கிளமேசன் சனசமூகநிலையக் கோஷ்டியும், குருநகர் சனசமூகநிலையக் கோஷ்டியும் அங்கு செல்லவிருக்கின்றன. இம்மாதம் 14-ம், 15-ம் திகதிகளில் இவ்விரு கோஷ்டிகளும் அநுராதபுரததில் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (தே-நி)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். சனி

அரியாலை மேற்குஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வே. கதிர்காமு தலைமையில் நடைபெற்றது புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. கே. மகேசன், உப தலைவர்- திரு. கதர்மலிங்கம், இணைச் செயலாளர்- செ. விஜயராசா செ. செல்வநாதன், தனாதிகாரி- க. சண்முகலிங்கம், போஷகர்- திரு சி கணேசன் பரிசோதகர்- சி. திருச்செல்வம்.

வ. ஜெகரட்சகதாஸ், அ. ஜெயரட்ணம், எம். ஜி. பங்கசபவனம். சி. அமிர்தலிங்கம், நா. யோகநாதன் பொ. நவநீதபாலன், ம. பரிமளசிங்கம், சி. கதிரவேல் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்

0 0 0

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணை சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக்கூட்டம் வேலணை கிராமசபைத்தலைவர் திரு. க. சதாசிவம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

காப்பாளர்:-க சதாசிவம், தலைவர்:-சி இராசரத்தினம் (ஆசிரியர்), துணைத்தலைவர்:- என். விசாகன், செயலாளர்:- மு.சி முத்துத்தம்பி, துணைச் செயலாளர்:-ப. அரசரெத்தினம், பொருளாளர்:-கா. கதிர்காமு, சி. கந்தசாமி, பொ. தம்பு, ஆ. செல்லத்துரை ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத்தெரிவு செய்யப்பட்

## வைக்கோல் களவு வழக்கு

### எதிரிவிடுதலை

அளவெட்டி, வெள்ளி

மாதகலைச் சேர்ந்த பேரம்பலம் சோதிலிங்கம் என்பவர்களுடைய வயலில் புகுந்து 200 ரூபா பெறுமதியான வைக்கோலை களவாடியதாக குற்றம் சாட்டி ஆசீர்வாதம் என்பவருக்கு எதிராக சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப் பட்டபோது சாட்சிகள் முரண்பாடு காரணமாக நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

## 'எளிமையான வாழ்வு இலங்கையருக்கு அவசியம்'

கோட்டை, வெள்ளி

''எளிமையான வாழ்வு வாழ்வதற்கு மக்களைத் தூண்டும்வகையில் இயக்கம் ஒன்றை நடத்துவது இப்போது மிகவும் அவசியமாகியுள்ளது'' என லங்கா சுதசி இயக்கத் தலைவர் திரு. ஜி. பி. காரியவாசம் வத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இப்போது ஏற்பட்டுவரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு எளிமையான வாழ்வு வாழப் பழகிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாட்டின் எதிர்காலம் நல்லதாக இருக்கும் என்று கூறிய திரு. காரியவாசம், திருமண வைபவங்களிலும் மற்றும் விருந்து வைபவங்களிலும் இப்போது வீணான செலவுகள் செய்யப்படுவதாகவும், இவை தவிர்க்கப்படவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

## உருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், சனி

காலஞ் சென்ற வழக்கறிஞர் திரு. ரி. முத்துச்சாமிப்பிள்ளையின் உருவப்படத்தை யாழ்ப்பாண சட்ட நூல் நிலையத்தில் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறேஸ்டர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

வழக்கறிஞர் திரு. ஏ. வீ. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நீதியரசர் திரு. கிறேஸ்டர் யாழ் மாவட்ட நீதிபதிஜனாப்இஸ்மெயில், யாழ் மாஜிஸ்திரேட் ஜனாப் ஜமீல், யாழ் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஆர். பரமகுரு, மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ் அனந்தகுமாரசாமி, மற்றும்

## பொன் விழா

சித்தன்கேணி, வெள்ளி

அல்வாய் வதிரி தமிழ்மன்றம், வதிரி டயமண்ட் விளையாட்டுக்கழகத்தின் 25 வது வருட பூர்த்திவிழா இம்மாதம் 12-ம் திகதிதொடக்கம் அடுத்தமாதம் 3 ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்தும் பல கழகங்கள் விளையாட்டுப்போட்டியில் பங்குகொள்ளவிருக்கின்றன.

வதிரி டயமண்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் இவ் விழாவுக்கான ஏற்பாடுகளை கவனிப்பதில் திருவாளர்கள் எஸ். கே. லோகநாதனும், எஸ். கே. ராஜேந்திரனும் ஈடுபட்டுள்ளனர்.

## 'ஈடுசெய்ய முடியாத இழப்பு'

உடுவில், வெள்ளி

''எமது பாடசாலையில் மாணவராக இருந்து பின்னர் அதே பாடசாலையில் ஆசிரியராக விளங்கி பிராமண சமூகத்திற்கு காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்கள் செய்ததொண்டுகள் எழுத்துக்களில் பொறிக்கக்கூடிய இலகுவான தொன்றல்ல. தமது மெய்வருத்தம் பாராது சமூகத்திற்காக உழைத்த அப்பெருமகனின் பூதவுடல் அழிந்தாலும் புகழுடம்பும், அவரின் கருத்துக்களும் எம்மத்தியில் நிலைத்திருக்கும். அவரது மறைவு பிராமண சமூகத்திற்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டமாகும்.''

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் சுன்னாகம் கிளை மேற்படி சங்கம் நடத்தும் பாடசாலையின் சமஸ்கிருத ஆசிரியராகப் பணிபுரிந்து அண்மையில் காலமான பிரம்மஸ்ரீ தி விஸ்வநாதக்குருக்களுக்கு அனுதாபம் தெரிவித்து நடாத்தியகூட்டத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அனுதாப செய்தியின் பிரதியொன்று காலஞ்சென்றவரின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## கல்வி விழா பற்றி 'நவம்' கருத்து

ஊர்காவற்றுறை, வெள்ளி

தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தடைப்பட்டுவரும் போது கல்வி நூற்றாண்டு விழாவைத் தமிழ்ப் பாடசாலைகளில் கொண்டாடுவது விரும்பத் தக்கதல்ல என கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் பாடசாலையில் விஞ்ஞானப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் ஊர்காவற்றுறை எம். பி. திரு நவரத்தினம் அபிப்பிராயம் தெரிவித்தார்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதியே இப் பொருட்காட்சியில் அவர்களது உற்சாகத்தைத் துரிதப்படுத்தமுடியும் என்பதற்காகவே தாம் இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பியதாக எம். பி. தனது உரையில் குறிப்பிட்டார்.

மாணவர்களின் எதிர்காலம் விஞ்ஞானம், கைத்தொழில் என்பவற்றில் தங்கியுள்ளது. எனவே விவேகமுள்ள தீவுப்பகுதி மாணவர்கள் தம் அறிவைப் பிரயோகஞ்செய்து வளர்ச்சி பெறவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தகுதியற்றவர் எனப் புகார்

மட்டக்களப்பு, வெள்ளி

இங்குள்ள கல்வி அதிகாரிகள் விசேஷ சித்தி பெற்ற ஆசிரியர்களின் வேலைகளைப் பரிசோதிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள விசேஷ கல்வி அதிகாரிகளை இங்கு அனுப்பி சிறப்புப்பாடங்களில் சித்தியெய்திய ஆசிரியர்களின் வேலைகளைப் பரிசோதிக்க ஆவனசெய்யவேண்டும்''

கீழ்மாகாண பயிற்சி பெற்ற ஆசிரியர் சங்கக் காரியதரிசி கல்வி மா அதிகாரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில அறிவு குறைந்த இந்த கல்வி அதிகாரிகள் ஆங்கிலத்தில் விசேஷபயிற்சி பெற்ற ஆசிரியரிடம் கேள்வி கேட்கும்போது கேலிக்கிடமாகிறார்கள் எனவும் அம் மகஜரில் பிரஸ்தாப சங்கக் காரியதரிசி திரு. மனோகரன் தெரிவித்துள்ளார்.

## ச. ச. நிலைய சமாசம்

வேலணை, வெள்ளி

வேலணை கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவத்தின் முயற்சியால் வேலணை சனசமூக நிலையங்கள் ஒன்று கூடி ஒரு சமாசத்தை நிறுவியிருக்கின்றன சமாச உறுப்பினர்கள் வருமாறு;

தலைவர் திரு. சி இராசரத்தினம் காரியதரிசி திரு. மு. சி. முத்துத்தம்பி தனாதிகாரி திரு. சி. கந்தவனம் மற்றும் உபதலைவர், உப காரியதரிசி, 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:

''வேலணைப் பகுதிக்கு பிறப்பு இறப்பு பதிவுகாரர்களை நியமிக்க வேண்டும்.

ஓர் மரண விசாரணை அதிகாரி வேலணை கிழக்கில் நியமிக்கப்பட வேண்டும்.

வேலணை தபால் கந்தோருக்கு தபால் விநியோகிக்க மேலும் இரு தபால் ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.''

## நிரந்தர ஊழியர்களாவர்

அளவெட்டி, வெள்ளி

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் நீண்ட காலமாக தற்காலிக வேலை செய்து வந்த 240 பேர் நிரந்தர ஊழியர்களாக்கப்பட இருக்கின்றனர்.

## மகஜர் கையளித்தார்

மன்னார், வெள்ளி

சமீபத்தில் மீன்பிடி தொழிற்சாலையை ஆரம்பித்து வைப்பதற்குச்சென்ற கடற்றொழில் கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவிடம்மன்னார் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ஏ. அழகக்கோன் மகஜர் ஒன்றைக் கொடுத்தார்.

மன்னார் மாவட்ட மீன்பிடித் தொழிலாளர்களின் தேவைகள், மீன்பிடி அபிவிருத்தித்திட்டங்கள், மீனவர்களின் பிரச்னைகள் ஆகியன அடங்கியுள்ளன.


அது நல்லது
அது இதமான


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மு ஸ் லி ம நிகழச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## நாடக விழா

சுழிபுரம், வெள்ளி

பெரிய விளான் இலங்கேஸ்வரி நாடக மன்றத்தினர் தமது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விக்கினேஸ்வரர் கோவில் வீதியில் ஒருகளியாட்டுவிழாவை நடத்தி வருகின்றனர். நாடகவிழாவும் சர்க்கஸ் காட்சிகளும் நடைபெறுகின்றன.

...வின்போது கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

......

## தொண்டர்படை

கோப்பாய், வெள்ளி

கல்வியங்காடு ஸ்ரீ ஞான பாஸ்கரோதய சனசமூக நிலையத்தாரால் தொண்டர் படையொன்று உருவாக்கப் பட்டுள்ளது. சமீப நாட்களில் இப்பகுதியில் நிலவும் திருட்டுக்களைத் தவிர்ப்பதற்கு இது தீவிர நடவடிக்கையெடுக்கும்.


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]


சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த

# எங்க ஊர் ராஜா

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | விஜயா (மட்டுநகர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | ராஜ் (நீர்கொழும்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர்.
★
ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன்
நடித்த

# கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன்: ப. நீலகண்டன்


சற் சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

...... (தே-நி

## கத்தி வெட்டு

அளவெட்டி, வெள்ளி

குரும்பசிட்டியைச்சேர்ந்த கதிரன்கணபதி என்பவருக்கும், எஸ். நடராசாவுக்கும் இடையில் ஏற்பட்ட பணத் தகராறு கத்தி வெட்டில் முடிந்ததாம்.

படுகாயமடைந்த கதிரன் கணபதி தற்போது அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் எஸ். நராசா என்பவரைகாங்கேசன்துறை பொலிசார் கைது செய்தனர்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
குழந்தைக்காக

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்
புதிய கொப்பி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Laurence Harvey, Jean Simmons
in
LIFE AT THE TOP
(adults)

Till 14-8-69
MANOHARA
JAFFNA
Daily 4 shows
Kerwin Mathews
as
THE VISCOUNT
(color)
(passes & concession suspended)


மு. சி. ஊத்துத்தம்பி, துணைச் செயலாளர்:- ப. அரசரெத்தினம், பொருளாளர்:- கா. கதிர்காமு, சி. கந்தசாமி, பொ. தம்பு, ஆ. செல்லத்துரை ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர் ......

## வெளியேறும் மிருகங்கள்

கல்குடா, வெள்ளி

இப்பகுதியில் கடந்த சில மாதங்களாகக் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் பயிற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. மிருகங்கள் எல்லாம் குடிக்க நீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகின்றன.

காடுகளில் உள்ள நீர் நிலைகள் வற்றியதன் காரணமாக மான்கள், நரிகள், குரங்குகள் ஆகிய மிருகங்க காட்டை விட்டு நீர் தேடிக் கிராமப் புறங்களுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்கின்றனவாம் கடும் தாகம் காரணமாகக் குரங்குகள் கிணற்றுக்குள் குதிக்கின்றன.

## 'ரூ டுக்களில் ஒட்டு வேலைகள்'

ருகம, வெள்

'அமைச்சர் வருகையை முன்னிட்டு ருகம பகுதிகளிலுள்ள வீதிகளுக்கு பொதுமராமத்துப்பகுதியினர் சில ஒட்டுவேலைகளை அவசரமாக மேற்கொண்டனர்' என்று பொதுமராமத்து தபால் தந்தி அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரமாவின் முன்னிலையிலேயே ருகம பட்டினசபையின் முன்னாள் தலைவர் திரு. சி. றூபேட் அந்தோனி தெரிவித்தார்.

அமைச்சர் இப்பகுதி வீதிகளைப்பார்வையிடவந்தபோதே திரு. அந்தோனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ருகம பசார் சிறியஅளவு மழை பெய்ததும் உடனே நீரினுள் மூழ்கும் நிலையை அடைந்தும் விடுவதாகவும் வீதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

## மறைந்திருந்தது

சுழிபுரம், வெள்ளி

மாதகல்கிழக்கைச்சேர்ந்த பொ. இரத்தினம் என்பவரை விஷப்பாம்பு தீண்டியதால் அவர் மயக்கமுற்ற நிலையில் உள்ளூர் மாந்திரீகவைத்தியர் ஒருவரிடம் உடன் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

இவர் தமது நீர்இறைக்கும் இயந்திரத்தின் மீது மூடியிருந்த சாக்கை எடுத்தபோதே அதற்குள் மறைந்திருந்தபாம்புதீண்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்டர் யாழ் மாவட்ட நீதிபதிஜனாப்இஸ்மெயில், யாழ் மாஜிஸ்திரேட் ஜனாப் ஜமீல், யாழ் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஆர். பரமகுரு, மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி, மற்றும் முன்னாள் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். ......

## வேண்டுகோள்!

விஸ்வமடு, வெள்ளி

விஸ்வமடு விவசாயப் படைமுகாமில்நடந்த திருட்டைத் தொடர்ந்து விலை மதிப்புள்ள பொருட்களான கைக்கடிகாரம், மோதிரங்கள் போன்றவற்றைக் கவனமாக வைத்திருக்கும்படி விஸ்வமடு வீரர்களுக்கு புதிய விஸ்வமடு பொறுப்பதிகாரி திரு. கே. விஸ்வநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். —

## எதிரிகள் விடுதலை

அளவெட்டி, வெள்ளி

வடலியடைப்பைச் சேர்ந்தஎஸ். கந்தையாஎன்பவரது வீட்டிலிருந்து 1020ரூபா ரொக்கத்தையும் சேலைகளையும் களவாடியதாக அதேயூரைச்சேர்ந்த ஜி. சரவணமுத்து, எம். கதிரவேலு ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் போது நீதிபதி சாட்சிகள் முரண்பாடு காரணமாக எதிரியை விடுதலை செய்தார்.

## வெங்காயம் திருடினராம்

அளவெட்டி, வெள்ளி

வசாவிளானை அடுத்த குட்டியப்புல வாசியானஇராசம்மாஎன்னும் பெண் வெங்காயம்உட்படவீட்டு பாத்திரங்களைஒருவீட்டிலிருந்து திருடியதாககுற்றம்சாட்டி சுன்னாகம் பொலிசாரால்மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி எதிரியை எச்சரித்து விடுதலை செய்தார்.

## இம்மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி குளாய் நீர் திட்டத்துக்கென ரூபா9லட்சம் இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் வேலைகள் இம்மாதம் 20 ம் திகதிக்குமுன் ஆரம்பிக்கப்படவிருப்பதாக நீர் வழங்கல் வடிகால் அமைப்புத்தலைவர் கிளிநொச்சி எம். பிக்குத் தெரிவித்துள்ளார்.


...து நல்லது
அது இதமானது




அதுவே
ஸ்போர்ட்ஸ்மன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் ஏதாவதொருவகை உயிர் வாழும் சாத்தியம் உண்டு

## மெரினர்-7 கண்டு பிடித்துள்ள இரு முக்கிய வாயுக்கள்!

ஹூஸ்டன், ஆகஸ்ட் 8

செவ்வாய்க்கிரகத்தின் தென் துருவத்தில் இருவித வாயுக்களை மெரினர்-7 கிரகம் கண்டு பிடித்துள்ளது. இந்த வாயுக்கள் உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதவை எனக் கருதப்படுகின்றது. எனவே செவ்வாய்க்கிரகத்தில் ஏதாவதொரு மிக நுண்ணியவகையிலாவது உயிர்கள் இருக்கத்தான் வேண்டும் என்று கலிபோர்னியாவில் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறினார்.

மெரினர்-7 அனுப்பியுள்ள படங்களையும் இதரத்தகவல்களையும் கலிபோர்னியாவிலுள்ள விஞ்ஞானிகள் விரிவாக ஆராய்ந்துவருகிறார்கள். மெரினர்-7 அனுப்பியுள்ள சில படங்களின்மூலம் செவ்வாய்க்கிரகத்தின் தென் துருவத்தில் மலைவிளிம்புகளில் இருவித வாயுக்கள் இருப்பது தெரியவந்தது. மீசெயின், அம்மோனியா ஆகிய இந்த இரு வாயுக்களும் உயிர்கள் வாழ்வதற்கு மிகவும் அத்தியாவசியமானவை என்று கருதப்படுகின்றது.

இந்த வாயுக்கள் செவ்வாய்க்கிரகத்தில் இருப்பதால் ஏதாவது ஒருவகையான உயிர்கள் அங்கு வாழவேண்டும் என்ற கருத்து உறுதியாகியிருப்பதாக ஒரு விஞ்ஞானி கூறினார். ஆனால் இந்த வாயுக்கள் எரிமலை வெடிப்புக்களினால் ஏற்பட்ட பனிப்படலங்களாகவே இருக்கவேண்டும் என்று இன்னொரு விஞ்ஞானி கருத்து வெளியிட்டார். எது எவ்வாறாயினும் 1973ம் ஆண்டில் செவ்வாய்க்கிரகத்தில் செயற்கைக் கிரகம் ஒன்று இறக்கப்படும்வரை அங்கு உயிர்கள் வாழும் சாத்தியம் பற்றிய கருத்துக்கள் வெறும் அனுமானமாகவே இருந்துவரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. மெரினர்-7 எடுத்த படங்களில் செவ்வாயின் தென்துருவ பனி முடிமீது பனிக்கட்டியாலான உறைச்சுவர்கள் கொண்ட கிடுகிடு குழிகளும்பனிபடர்ந்ததிடல்களும் காணப்பட்டன.

தென் துருவ விளிம்பு சொட்டை விழுந்துள்ளது. ஆங்காங்கு பனிப்படர்கள் உள்ளன. இக்காட்சி குங்குமப்பூ நிறமுள்ள பாலைவரை விரிவடைந்துள்ளது.

செவ்வாய்ப் படங்கள் செவ்வாயிலிருந்து பூமிக்கு 61 800,000 மைல் தூரம் வருவதற்கு 5 நிமிடமாகிறது.

மெரினர்-7 செவ்வாயிலுள்ள பகுதியான 'மெரிதியானி சைனஸ்' மீது வீறிட்டுச் சென்றது. மெரிதியானி சைனஸ் சுருமீன் வடிவில் அமைந்துள்ளது. இரட்டை செதில்கள்கூட உள்ளன. இந்த செதில்களின் நுனிகள் செவ்வாயின் தரையில் ஆழமாகப் பதிந்துள்ளது தெளிவாகத் தெரிந்தது.

தென்துருவப் பனிமுடியின் விளிம்பிலுள்ள குழிக்குள் தென்புறத்தில் மாலை வெய்யில் நன்றாகப் பரவியிருந்தது. குழியின் உறைச்சுவரில் பூமியின் சுவடுகள் பட்டையடித்தது போல் தெரிந்தது இப்படம் தான் மிகவும் அருமையானது என்று கருதப்பட்டது. செவ்வாய் கிரகத்திலிருந்து 2000 மைல் தூரத்தில் மெரினர்-7 எடுத்த படங்கள் ஒன்றில், பிரமாண்டமானகாலடிச் சுவடு தெரிவதை விண்வெளி விஞ்ஞானிகள் கண்டார்கள். இது மனிதனின் காலடிபோல் உள்ளதாம்.

செவ்வாயில் 'ஹெலலாஸ்' என்ற பகுதி ஒளிமயமான பாலை நிலமாகும். அதன் விளிம்பில் காலடி பதிந்துள்ள பள்ளம் கோடிட்டது போல் தெரிகிறது. அதன் நீளம் 20 மைல் இருக்கும். ஏவுகணை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள அறிவிப்பாளர் ஒலிபரப்புக் கருவியில் 'செவ்வாய் கிரகத்தில் உயிர்வாழ்வினம் இருப்பதற்கு முதல் அடையாளம்' என்று வேடிக்கையாகச் சொன்னார்

ஆனால் இது ஒரு மலையின் நிழல்வடிவமாக இருக்க வேண்டும் என்று பின்னர் கூறப்பட்டது.

## இந்திய அரசில்மேலும் பல ராஜினாமாக்கள்?

புதுடில்லி, ஆகஸ்ட் 8

இந்திய அரசின் மிக முக்கிய பதவிகளை வகித்த திரு. மொரார்ஜி தேசாய், திரு. வி. வி. கிரி, திரு. சஞ்சீவ ரெட்டி போன்றவர்கள் தம் பதவிகளை ராஜினாமாச்செய்ததைத்தொடர்ந்து மேலும் சில முக்கியஸ்தர்கள் பதவிகளை ராஜினாமாச் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகத் தெரிகின்றது

ராஜ்யசபையின் துணைத் தலைவர் திருமதி வயலட் ஆல்வா இப்பொழுது ராஜினாமா செய்துவிடக்கூடும் என்று செய்திகள் அடிபடுகின்றன. உதவி ஜனாதிபதி பதவிக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்படாததே இதற்குக் காரணமென்றும் கூறப்படுகின்றது.

லோகசபை சபாநாயகராகத் தம்மை காங்கிரஸ்கட்சி நிறுத்தாதது குறித்தும் தற்போது துணை சபாநாயகராக விருக்கும் தி. காடிங்கரும் கவலையடைந்திருக்கிறாரென்றும் தெரிகின்றது.

திருமதி வயலட் ஆல்வா விலகினால் ராஜ்யசபை துணை சபாநாயகர் பதவிக்கு புதிதாக ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டியிருக்கும்.

## "கீரிமலையில் பொலிஸ் நிலையம் நிறுவுக"

அளவெட்டி, வெள்ளி

"புனித ஸ்தலமான கீரிமலையில் அடிக்கடி நிகழும் காடைத்தனங்களை நீக்க ஒரு பொலிஸ் நிலையம் அமைக்கப்படவேண்டும்" என பொலிஸ் மா அதிபர் திரு. அலெரிக் அபயகுணவர்த்தனவுக்கு கீரிமலை மக்கள் மகஜர் ஒன்று அனுப்பி வைத்துள்ளனர்.

வடமாகாண பொலிஸ் சுப்ரீண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கும் காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகத்துக்கும் இம்மகஜர்களின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புனித தலமாக விளங்கும் கீரிமலையில் தினமும் புனித தன்மையைக் கொடுக்கக்கூடிய செயல்கள் நிகழ்கின்றன. இதனால் கீரிமலையின் புனிதத் தன்மை கெடுவதுடன் புனித கைங்கரியங்களைச் செய்ய வருவோரும் உல்லாசப் பிரயாணிகளும் இங்கு நீராட

## சுவிட்சர்லாந்து டாக்டரை ஏமாற்றிவிட்டாராம்

கோட்டை, சனி

இலங்கைக்கு உல்லாசப் பிரயாணியாக வந்த சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த திரு. எறிக்ஹார்டர் என்பவரை இலங்கையைச் சேர்ந்த நகைக்கடைக்காரர் ஒருவர் ஏமாற்றிவிட்டாரார், விலை மதிப்பான கற்கள் என அவரிடம் கொடுத்துவிட்ட கற்கள் ஒரு பெறுமதியும் அற்றவை என்பதை குறிப்பிட்ட டாக்டர் தமது நாடு திரும்பியதும் கண்டுபிடித்தாராம் இதுசம்பந்தமாக டாக்டர் ஹார்டர் ஜெனிவாவில் ஒரு வழக்கறிஞருடன் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## பட்டப்பகலில் திருட முயன்றவர் கைது

## திருமலைச் செய்தி

திருகோணமலை, வெள்ளி

கள்ளக் குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலரைக் கந்தளாய்ப் பிரிவு காரியாதிகாரி திரு இ. ஆர். ஓ. டி. சில்வா விசாரணை செய்து வருகிறார். அவர்களின் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைபறிமுதல் செய்திருப்பதுடன் அவர்கள் அரிசி பெறுவதற்காக ஓர் அனுமதிப் பத்திரத்தையும் அவர் அவர்களுக்கு வழங்கியுள்ளார். பூரண விசாரணையின் பின் அவர்கள் இலங்கைப் பிரஜைகள் என்று நிரூபிக்கப் பட்டு விட்டால் மீண்டும் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்று காரியாதிகாரி தெரிவித்தார்.


### கோரிக்கை

திருகோணமலை நகர சபையை 11 வட்டாரங்களாகப் பிரிக்க வேண்டும் என்று திருகோணமலை வரியிறுப்பாளர் சங்கம் உள்ளூராட்சி அமைச்சர் நியமித்துள்ள நால்வர் கமிட்டிக்குச் சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் கூறியுள்ளது. விசாரணைக் கமிட்டிக்கு திருகோணமலை வரியிறுப்பாளர் சங்கம் சமர்ப்பித்த மகஜரில் "தற்போதைய நகரசபை நிர்வாக எல்லையுடன் வேறு பிரதேசங்களைச் சேர்க்கக்கூடாது. நகர எல்லைக்குட் புதிய கிராமசபை எதையும் நிறுவக் கூடாது." என்று கோரியுள்ளார்.

### கிராம முன்னேற்ற சங்கக்கூட்டம்

"கொட்டியாபுரப்பற்றில் மிகவும் சிறந்த முறையில் செயலாற்றும் சங்கமாக, கட்டை பறிச்சான் கி.மு.ச. சேவையாற்றுகிறது என்பது கடந்த கால சேவைகளை க் கண்ணோக்கும்போது காணக் கூடியதாக உள்ளது. வேளாண்மைப் பயிர்ச் செய்கையோடு மட்டும் நின்று விடாமல் இங்குள்ள தோட்டப் பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டால் இக் கிராமம் பொருளாதார விருத்தியடைவதுடன் செல்வம் கொழிக்கும் சீமையாக மாறும் என்பதிலும் சந்தேகமில்லை"

கட்டை பறிச்சான் கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டத்திற்குப்பிர



யாழ்ப்பாண ரோட்டரியின் நற்பணி. மானிப்பாய் 5-ம் வட்டாரத்தில் விநாயகர் கோவிலுக்குப் பக்கத்தில் ஹரிஜனர்களுக்காக யாழ்ப்பாணம் ரோட்டரி சங்கத்தார் ஒரு கிணறு வெட்டுவதற்கான நன்கொடை அளித்தனர். மானிப்பாய் பட்டினசபைதலைவர் ரோட்டேரியன் இராஜன் தேங்காய் உடைக்க ரோட்டரி சங்கத் தலைவர் மண்வெட்டியால் முதல் வெட்டு வெட்ட அங்குரார்ப்பண விழா நடைபெற்றது.

## காணித்தகராறு பெண்ணுக்கு கத்திவெட்டு

அளவெட்டி, வெள்ளி

காணித்தகராறு கத்தி வெட்டில் முடிந்தது. பெண் ஒருவர் கத்திவெட்டுக்கிலக்கானார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த நாதன் என்பவருக்கும் கனகம்மா என்ற பெண்ணுக்கும்இடையில் ஏற்பட்ட காணித்தகராறு இறுதியில் கத்திவெட்டில் முடிந்தது.

படுகாயம் அடைந்த கனகம்மா அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டதை அடுத்து பொலிசார் தீவிரபுலன்விசாரணைசெய்கின்றனர்.

## "நண்பர் கேலிசெய்தனராம் மனைவியைவிட்டு வாழமுற்பட்டார்"

அளவெட்டி, வெள்ளி

'இவ்வருடம் பெப்ரவரி மாதம் 5-ம் திகதி வாதிக்கும், பிரதிவாதிக்கும் சிறந்த முறையில் திருமணம் நடைபெற்றது. சில நாட்களின் பின் வாதி, தன்னை பிரதிவாதி அடித்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டதாக என்னிடம் முறையிட்டார். வாதியைத் துரத்திவிட்டு ஒட்டிசுட்டானுக்கு ஓடிச் சென்ற பிரதிவாதியை சமாதானமாக்க ஒட்டிசுட்டானுக்குப்போனேன். அங்கு அவர் 'உனது பெற்றதாய்க்குச் சமமான இப்பெண்ணை ஏன் மணம்செய்தாய்' என நண்பர்கள் கேலிசெய்ததால் வாதியை விட்டகன்று வாழ முற்பட்டதாகக் கூறினார். ஒருவாறு சமாதானப்படுத்தி ஒற்றுமையாக வாழ வைத்தேன். பின்பும் பிரதிவாதியைத் துரத்திவிட்டுத் தானும் எங்கோ சென்று

தெல்லிப்பழையைச் சேர்ந்த இராசம்மா என்னும் பெண் இவ்வழக்கைத் தாக்கல்செய்திருந்தார்.

மேல் விசாரணை ஒத்திப் போடப்பட்டது.

## இவ்வாண்டுக்குள் முடிவடையும்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியில் ஒருமத்திய மகாவித்தியாலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடவேலை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவைப்பத்திரம்மந்திரிசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுமுடிவுக்குள் கட்டிடம் அமைக்கப்பட்டு முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1966-ம்ஆண்டு காணி நீர்ப்பாசன மின்சாரஅமைச்சர் திரு.சி. பி. டி. சில்வாவினால்

## 'மக்களுக்கு பணிசெய்ய முடிந்தால்தான் பதவியில் நீடித்திருப்பேன்'

— திருமதி இந்திராகாந்தி

புதுடில்லி, ஆக. 8

சாதாரண பொது மக்களுக்கு தம்மால் பணியாற்ற முடியுமானால் மட்டுமே தாம் பிரதம மந்திரிப் பதவியில் நீடித்திருக்க முடியும்

பிரதமர் இந்திரா காந்திக்கு சொந்தமாக நகைகளும் இருக்கின்றன. இதில் ரூபா 25 ஆயிரம் பெறுமான நகைகளுக்கு சொத்து வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ரூபா 25 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள நகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண பொது மக்களுக்கு ம்மால் பணியாற்ற முடியுமானால் மட்டுமே தாம் பிரதம மந்திரிப் பதவியில் நீடித்திருக்க முடியும் என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திகூறினார்,

பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்னால் வங்கிதேச உடமைக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக கூடியிருந்த பள்ளி மாணவர்கள் கூட்டத்தில் அவர் பேசினார்.

வங்கி தேச உடைமை எனது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று சிலர்பயமுறுத்துகிறார்கள். எனது மக்கள் பணியை இந்தப் பயமுறுத்தல்களால் தடை செய்துவிட முடியாது பயந்தவர்கள் தாம் இப்படி பயமுறுத்தல்களில் ஈடுபடுவார்கள் என்று திருமதி காந்திகுறிப்பிட்டார்.

வங்கி தேசஉடைமையாக்கப்பட்டது ஒன்றும் 'மாஜிக்' விளையாட்டல்ல. நாட்டை முன்னேற்றுவதற்கு அது ஒரு நேர்வழிதான் மேற்கொண்டும்பல நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் அவர்.

வங்கி தேசஉடைமையாக்கியதின் மூலம் நாடு சீர்குலைந்து விடும் என்கிறார்கள்.. ஆனல் மக்களின்அபரிமிதமான ஆதரவு இருக்கும் போது நாட்டில் எவ்வாறு சீர்குலைவு ஏற்பட முடியும் என்று அவர் கேட்டார்.

## இந்திராவின் சொத்து விபரம்

பிரதமர் இந்திரா காந்தியின் சொத்து மதிப்பு பற்றிய விவரங்களை டெல்லி மந்திரி பி.சி- சேத்தி ஆட்சி மன்றத்தில் அறிவித்தார்.

பிரதமர் இந்திராகாந்தியின் சொத்து மதிப்பு பற்றி சம்யுக்த சோஷலிஸ்டு கட்சி தலைவர் மதுலிமாயி ஆட்சி மன்றத்தில் கேள்விகள்கேட்டார்.

இதற்கு பதிலளித்து டெல்லி அரசு உதவி நிதி மந்திரி பி, சி. சேத்தி கூறியதாவது:

'பிரதமர் இந்திராகாந்திக்கு அவரது சொந்த ஊரான அலகாபாத்தில் ஒரு சொந்த வீடு இருக்கிறது. இந்த வீட்டின் மதிப்பு ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் என்று சொத்துவரி அதிகாரிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வீட்டின் மதிப்பு கடந்த 4 வருடங்களாக மறு பரிசீலனை செய்யப்படவில்லை.

களும் இருக்கின்றன. இதில் ரூபா 25 ஆயிரம் பெறுமான நகைகளுக்கு சொத்து வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ரூபா 25 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள நகைகள்



பற்றிய விவரங்கள் முழுவதையும் வெளியிட்டுஅவைகளுக்கு பிரதமர் இந்திரா காந்தி சொத்துவரி கட்டி வருகிறார்.'

## வட வியட்நாமில் விடுதலையான யு. எஸ். வீரர்கள்

நியூயோர்க், ஆகஸ்ட் 8

வடவியட்நாமில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று அமெரிக்க ராணுவ வீரர்கள் விடுதலை செய்யப்பட்டு நியூயோர்க் வந்துசேர்ந்துள்ளார்கள். தாயகத்துக்குத் திரும்பிவந்ததில் தாங்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக அவர்கள் கூறினார்கள்

கைதிகளாக இருந்த பொழுது தங்களுக்குபோதுமான உடை, உணவு, இருப்பிடம் யாவும் வசதியாக இருந்ததாக அவர்கள் கூறினார்கள். எதற்காக தாங்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்பது தெரியவில்லையென்றும் அவர்கள் கூறினார்கள். ......

## ரூபா 100 அபராதம்

அளவெட்டி, வெள்ளி

8 முறை தண்டிக்கப்பட்ட ஒருவர் ஒன்பதாவது தடவையும் அபராதம் பெற்றார்.

34 திரும் கள்ளை சட்ட விரோதமாக வைத்திருந்ததாக டி.. சைமன் என்பவர் மீது குற்றஞ்சாட்டி சங்கானை மதுபரிபாலன அதிகாரி திரு. முதியனசாலகே விஜயரத்தின பண்டாவினால் தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி எஸ். ஆனந்த குமாரசுவாமியிடம் பிரஸ்தாபநபர் 8 முறைநீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என தெரிவிக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புகொள்ளவே நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## நூல் வெளியீட்டு விழா

கண்டி, வெள்ளி

ஈழத்து எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியர் எழுதிய 'நீ' என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 11ம் திகதி மாலை கண்டி இந்து உயர்தர பாடசாலை மண்டபத்தில் திரு. இரா. சிவலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## "இப்படி மக்கள் வேறெங்கும் இல்லை"

வெள்ளவத்தை, வெள்ளி

"ஒரு இனத்தின் மொழி, கலை, கலாச்சாரம் என்பனவற்றைப் படிப்படியாக அழித்து வந்தால் அந்த இனம் தானகவே அழிந்து விடும். ஆட்சிமன்றங்களிலும், பொதுமேடைகளிலும் எமது இனத்தின் விடுதலையைப்பற்றிப் பேசிப்பேசி அலுத்துவிட்டோம். இப்போது அமரர் அறிஞர் அண்ணு சொன்னபாதையில் உணர்ச்சிமிக்க நாடகக் கலை மூலம் தூங்கிக் கிடக்கும் தமிழர்களைத் தட்டியெழுப்ப முயற்சிக்கிறோம்'' என வழக்கறிஞர் திரு. மு. திருநாவுக்கரசு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேறிய சங்கானைச் சோமுவின் 'ஒருத்தி சொன்ஞள்' என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், மனிதன் சந்திர மண்ணில் நடமாடி வந்துவிட்டபின்னும் எமது தமிழ் மக்களுள் ஒருசாரார் கோவிலினுள் போகமுடியாதவாறு த்டுத்துவைக்கப்படுகின்றனர் என்றும், இப்படியான அதிசய மக்களை உலகில் வேறெங்கும் காணமுடியாதென்றும் சொன்னார்.

திரு. வீ. ஏ. புரட்சிமணியும் பேசினார்.

## ஆங்கில தரம் உயர்கிறது

கோட்டை, சனி

ஆங்கிலத்தின் தரம் இப்பொழுது சிறிது உயர்ந்து வருவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் வெளியான ஜி. சி. ஈ. பரீட்சை பெறுபேறுகள் இதனை வெளிப்படுத்தியுள்ளன. மற்ற மாகாணங்களிலும் இவ்விதம் தரம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புனித தன்மையைக் கொடுக்கக்கூடிய செயல்கள் நிகழ்கின்றன. இதனல் கீரிமலையின் புனிதத் தன்மை கெடுவதுடன் புனித கைங்கரியங்களை செய்ய வருவோரும் உல்லாசப் பிரயாணிகளும் இங்கு நீராட முடியாமல் கஷ்டப்படுகின்றனர். ஆதலால் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து கீரிமலையின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க ஒரு பொலிஸ் நிலையம் கீரிமலையில் அமைக்கவேண்டும்

## பரிசோதனைக்கு பொருட்கள்

சங்கானை, வெள்ளி

வட்டு, இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றில் இனந்தெரியாத சிலர் ஓட்டைப் பிரித்து உட்புகுந்து ரொக்கப்பணம் உட்பட அங்கிருந்த சில பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர். சங்கானைப் பொலிசார் விசாரணை நடத்தி சந்தேக நபர்களின் கை அடையாளம் பதிந்துள்ளதெனக் கருதப்படும் சில பொருட்களை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

வழக்கறிஞருடன் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## பட்டப்பகலில் திருட முயன்றவர் கைது

நல்லூர், வெள்ளி

சிறுமி ஒருத்தி அணிந்திருந்த தங்கச் சங்கிலியைத்திருடமுயன்றதாக அந்தோனி டேவிட் என்பவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டார்.

நேற்று மாலை 5-30 மணியளவில் கச்சேரிக்கு சமீபத்தில் இத்திருட்டை செய்ய முயன்றதாகக் கூறப்படும் டேவிட்டை சப்இன்ஸ்பெக்டர் பெர்ணண்டோ தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி கைது செய்தது.

இப்பொலிஸ் கோஷ்டியில் சார்ஜன்ட் தாமோரம் பிள்ளை, கான்ஸ்டபிள்கள், பாக்கியநாதன், வால்ட்டர், திகிரிபண்டா ஆகியோர் இருந்தனர்.

கைது செய்யப்பட்ட டேவிட்வேறும் சிலதிருட்டுக்கள் சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்தவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

பட்டால் இக் கிராமம் பொருளாதார விருத்தியடைவதுடன் செல்வம் கொழிக்கும் சீமையாக மாறும் என்பதிலும் சந்தேகமில்லை''

கட்டை பறிச்சான் கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டத்திற்குப்பிரதம அதிதியாகப் கலந்து கொண்ட கொட்டியாபுரப் பற்று காரியாதிகாரி திரு. பிரமஸ்ரீ சாம்பசிவஐயர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செ. விபுணசேகரம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொலிஸ் அதிகாரி திரு. பாலகிருஷ்ணன், மூதூர் சுகாதார அதிகாரி கந்தையா, வட்டாரக் கூட்டுறவுப் பரிசோதகர் சேனையூர் மகாவித்தியாலய அதிபர், கமத்தொழில் சேவை அதிகாரி ஆகியோர் களும்கலந்துரையாற்றினர்.

## கொலைகள் அதிகரிப்பு

இவ்வருட ஆரம்பத்திலிருந்து இன்றுவரை451 கொலைகள் நடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மாகாணம், மேல்மாகாணம் ஆகியவற்றிலேயே அநேகமான கொலைகள் நடந்துள்ளன. சராசரி நாளொன்றுக்கு இரு கொலைகள் நடைபெறுவதாகப் பொலிஸ்பகுதி அறிவித்துள்ளது.

ஏன் மணம்செய்தாய்' என நண்பர்கள் கேலி செய்ததால் வாதியை விட்டகன்று வாழ முற்பட்டதாகக் கூறினார். ஒருவாறு சமாதானப் படுத்தி ஒற்றுமையாக வாழ வைத்தேன். பின்பும் பிரதிவாதியைத் துரத்திவிட்டுத் தானும் எங்கோ சென்று விட்டார்.'

மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. ஆனந்த குமாரசாமி முன்னிலையில் விசாரிக்கப்பட்ட ஜீவனும்ச வழக்கொன்றில் சாட்சியமளித்த வாதியின் சிறிய தந்தையான எஸ். இளையவன் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊரெழுவைச் சேர்ந்த என். நடராசா என்பவரிடமிருந்து ஜீவனும்சம் கோரி

## விஸ்தரிக்க நடவடிக்கை

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் கிராமசபை தனது மின்சார விநியோகத்தை கிராமம் முழுவதற்கும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மேற்படி சபையின் மின்சார அத்தியட்சகர் திரு. யோசெப் தெரிவித்துள்ளார்.

வைப்பத்திரம்மந்திரிசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுமுடிவுக்குள் கட்டிடம் அமைக்கப்பட்டு முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1966-ம்ஆண்டு காணி நீர்ப்பாசன மின்சாரஅமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவினல் அடிக்கல் நாட்டப்பட்ட இக் கட்டிடத்தின் ஆக்கவேலைகள் தாமதிப்பது குறித்து கிளிநொச்சி எம். பி. கா. பொ. இரத்தினம் ஆட்சிமன்றத்தில் பேசினர். மந்திரி சபையிடம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதென்ற தகவல் அப்போது தெரிவிக்கப்பட்டது.

## இலவச கண்சிகிச்சை

சுழிபுரம், வெள்ளி

பிரபல கண்வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராசா கடந்த 3-ம் திகதியன்று பண்டத்தரிப்பு மக்களுக்கு இலவசமாக கண் சிகிச்சையளித்தார்.

பண்டத்தரிப்பு பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த இலவச கண் சிகிச்சையைப்பெறுவதற்கு நூற்றுக்கணக்கானேர் வந்திருந்தார்கள்.


ஸ்டீல்சன்ஸ் ஸ்தாபனத்தார்

விநியோகம் செய்கிறர்கள்

★ பூட்டுகள்
★ பிணைச்சல்கள்
சகலவித பொருட்களும்

★ யானை மார்க்
அஸ்பெஸ்டர்ஸ்
கூரைத் தகடுகள்

வெளிநாட்டில் தயாரித்த
முள்ளுக்கம்பிகள்
திறமை வாய்ந்த
பித்தளைப் பூட்டுக்கள்
பிணைச்சல்கள்
தயாரிப்பாளர்:-
பிறின்ஸ் பிறுஸ் பக்டறி
கெலனியா.

★ 'குரங்கு' மார்க்
தென்னுபிரிக்காவில்
தயாரிக்கப்பெற்ற
"ஸ்பிரிட்"

★ சிநேசம்
இன்னும்
திறமைவாய்ந்த
பெயின்ற் வகைகள்

குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்

ஸ்டீல்சன்ஸ்

287-289 ஸ்ரான்லிவீதி, (தொலைபேசி: 7035) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

செல்வம் தீயது அல்ல. அதைத் தவருகப் பயன்படுத்துவதே தீமையாகும். ஏதாவது ஒருவகையில் எப்போதும் செல்வம் தேவைதான்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 25-ந் திகதி (9-8-69)


## தனியார்துறை ஊழியர்

தனியார்துறை ஊழியரின் சம்பளமும் உயர்த்தப்படவேண்டுமென்றும் வாழ்க்கைச்செலவு மும்மடங்கு அதிகரித்திருப்பதை இம்முறை வரவு செலவுத் திட்டமேஎடுத்துக்காட்டியிருக்கிறதென்றும் இதனுல் தனியார்துறைஊழியரின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டியது அவசியமே யென்றும் தொழிற்சங்கங்கள் பல குரல் எழுப்பியிருக்கின்றன. இந்தக்கோரிக்கையில் நியாயமில்லையென்று யாரும் சொல்லமுடியாது

அரசாங்க ஊழியரின் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென சம்பளக் கமிஷன் செய்த சிபார்சின்படி ஒக்டோபர் முதல் திகதி தொடக்கம் அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு கிடைக்கவிருக்கிறது. இது பற்றி நாம் இதே பத்தியில் குறிப்பிட்டபோது தனியார்துறைஊழியருக்கும் சம்பளஉயர்வு அளிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தோம். அரசாங்க ஊழியர்களுக்கு கஷ்ட நஷ்டங்கள் இல்லாமலில்லை. அவர்களுக்குசம்பள உயர்வு வழங்கப்படுவதில் தவறெதுவுமில்லை. ஆனுல் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுகொடுக்கும்போது மற்றவர்களைப் பற்றியும் நிதி மந்திரியும் அரசாங்கமும் சிந்தித்திருக்கவேண்டும். வாழ்க்கைச்செலவு உயர்வினுல் அரசாங்க ஊழியர்மட்டும் பாதிக்கப்படவில்லை. தனியார்துறை ஊழியர், தோட்டத் தொழிலாளர் உட்பட இந்த நாட்டு மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அரசாங்க ஊழியருக்கு மட்டும் சம்பள உயர்வு அளித்ததனுல் வாழ்க்கைச்செலவு மேலும் உயருமே தவிர குறையாது. வாழ்க்கைச்செலவுஉயர்வைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் நிதிஅமைச்சரும் அரசாங்கமும் மார்க்கம் கண்டுபிடித்திருந்தால் அரசாங்க ஊழியருக்குச் சம்பளஉயர்வு கொடுக்கவேண்டிய அவசிய...

அரசாங்க ஊழியருக்கு இடைக்கால அலவன்ஸ் என்றும் விசேஷ அலவன்ஸ்என்றும் நாணய மதிப்புக்குறைவு அலவன்ஸ் என்றும் மூன்று சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கையில் தனியார்துறை ஊழியருக்கு ஒரேயொரு சம்பள உயர்வுதான் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் தொழிற்சங்கங்கள் கூறுவது தவறல்ல. மக்கள் பிரதிநிதிகளின் அலவன்ஸ் உயர்த்தப்படவேண்டுமெனக் குரல் கொடுப்பவர்களும் கூட தனியார்துறை ஊழியர்பற்றி அதிகம்கவலைப்படுவதாகத்தெரியவில்லை. தனியார்துறை ஊழியரும் தோட்டத் தொழிலாளரும் இந்நாட்டின் வருமானத்துக்கு முதுகெலும்புபோன்றவர்கள். அவர்கள் திருப்தியாக வாழ வழிகாணவேண்டும் இப்பொழுதுள்ளநிலையைப் பார்க்கையில், தனியார் துறையினரையும் தோட்டத் தொழிலாளரையும் திருப்திப்படுத்துவதற்கு மாருகஅவர்களுக்கு அதிருப்தியேற்படுத்தவே முயற்சிசெய்யப்படுவதாகத் தெரிகிறது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும். இல்லையேல் அரசாங்க ஊழியருக்குப்போல் தனியார்துறையினருக்கும் தோட்டத்தொழிலாளருக்கும்சம்பளஉயர்வுஅளிக்கப்படவேண்டும். ஆயுதப் படைகளின் சம்பள விகிதம் பற்றி ஆராய்வதற்கு கமிட்டி நியமிக்க உத்தேசித்துள்ள அரசாங்கம் தனியார்துறை ஊழியர்பற்றியும் தோட்டத் தொழிலாளர் பற்றியும் ஏன் கவலைகொள்ளவில்லை? எதை பெறுவதானுலும் போராட்டம் நடத்தித்தான் பெறமுடியும் என்ற மனப்பான்மை வளர்ந்து வருவதற்கு இடமளிக்காமல், தனியார்துறை ஊழியர், தோட்டத்தொழிலாளர் ஆகியோரின் சம்பள உயர்வு விஷயத்தில் தனியார் துறை முதலாளிமார்களை நிதிஅமைச்சர் அழைத்துப் பேசி விரைவில் ஒருநல்லமுடிவைச் செய்வது தனியார்...

# "இமாலய வகுப்புவாதத் தவறை" பெரும்பான்மை கட்சிகள் திருத்துமா?

## நாட்டில் மீண்டும் சமூகஒற்றுமை ஏற்பட ஒரே நல்லவழி

—அரன்

"சிறுபான்மையோரின் வகுப்புவாதம் பெரும்பான்மையோரின் வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடும், சிறுபான்மையினர் தீவிரமான வகுப்புவாதம், பெரும்பான்மையோரின் அதிக தீவிரமான வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடும்" என்று எச்சரிக்கை செய்கிருர் முன்னுள் 'டைம்ஸ் ஆப் ஸிலோன்' பத்திரிகை ஆசிரியரான டோரி டி. சூஸா அவர்கள்.

இலங்கையின் சமீபகால அரசியலை அவர் நன்குணர்ந்தவர். இலங்கை அமைதியாகவும், சுபீட்சமாகவும் முன்னேறவேண்டும் என்பதில் உண்மையிலேயே அக்கறை உள்ளவர். 'டெயிலி நியூஸ்' பத்திரிகையிலே "தமிழரின் கலக்கம் மோசமான குழப்படியாகிறது" என்ற தலைப்புடன் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இலங்கையிலே இன்றுள்ள மோசமான நிலைக்குத் தமிழ்த் தலைவர்களின் வகுப்புவாத மனப்பான்மை தான் காரணமென்று குற்றஞ் சுமத்தியுள்ளார்.

தமிழ்த் தலைவர்கள் எவ்வளவோ தவறுகள் செய்திருக்கலாம். சிங்களத் தலைவர்கள் அதைவிட அதிக தவறுகள் செய்திருக்கலாம் என்ருலும் இன்று இலங்கையின் அரசியலில் இரு பெரிய சமூகங்களுக்கும் விரும்பத்தக்க ஒற்றுமையோ, ஒத்துழைப்போ இல்லையென்பதையும், வகுப்புவாத உணர்ச்சிகள் அதிகரித்து வருகிறதென்பதையும் யாரும் மறுக்கமுடியாது. இந்த மோசமான நிலையிலிருந்து நாட்டை எப்படி மீட்பது? இரு பெரிய சமூகங்களிடையேயும் நல்லுறவும், ஒத்துழைப்பும் ஏற்பட என்ன செய்யவேண்டுமென்பதை விருப்புவெறுப்பின்றி டோரி அவர்கள் கூறியிருந்திருப்பின் அது பல விதங்களிலும் வரவேற்கத் தக்கதாக இருக்கும். இப்போது இந்தக் கட்டுரையை நான் எழுதவேண்டிய அவசியமும் இருந்திராது

டோரி அவர்கள் தமது கட்டுரையில் இலங்கையிலே வகுப்புவாத அரசியலுக்குத் தமிழ்த் தலைவர்கள்தான் காரணமென்று குற்றஞ் சுமத்துகின்ருர். ஜி ஜி யின் "ஐம்பதுக்கைம்பது" கோரிக்கைதான், பெரும்பான்மைச் சமூகத்தவரிடையே பலத்த வெறுப்பையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியதென்கின்ருர் அவர். "ஐம்பதுக்கைம்பது" கோரிக்கையை பிரிட்டிஷார் மறுத்த பிறகு அந்தக் கோஷத்தை விட்டுவிட்டு ஒற்றையாட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தலைவர்கள் சேர்ந்தார்கள் என்ருலும் அதற்கிடையிலே பெருஞ் சேதம் ஏற்பட்டுள்ளதென்று கூறி, இலங்கையில் வகுப்புவாதம் ஆரம்பமானதற்குத் தமிழ்த் தலைவர்கள்தான் காரணம் என்று குற்றஞ் சுமத்துகின்ருர்.

இலங்கையில் இரு சமூகத்தவரும் ஆதிகாலந்தொட்டு நட்புடன் வாழ்ந்து வந்திருக்கையில், பிரிட்டிஷ் ஆட்சியாளர், பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தி எவ்விதம் இரு சமூகத்தாரும் ஒன்றுபடாதபடி தடுத்து வந்தனரென்பது பகிரங்க ரகசியம். பிரித்தாளும் தந்திரம் ஏகாதிபத்தியவாதிகளின் முக்கிய ஆயுதங்களில் ஒன்று. ஆகவே இலங்கையில் இன்று வகுப்புவாதம் இருப்பதாயின் அதற்கு வித்திட்டு பசளை போட்டு வளர்த்தவர்கள் யாரென்பதை விளக்கத் தேவையில்லை. பிரிட்டிஷார் ஒருசமயம் பெரும்பான்மையோரையும், மறுசமயம் சிறுபான்மையோரையும் தட்டிக்கொடுத்து, தங்கள் ஆட்சியை நடத்திவந்தனர். இந்தியாவை இரண்டாகப் பிரித்துவிட்டுச் சென்றவர்கள் "ஐம்பதுக்கைம்பது" கோரிக்கையை மறுத்ததற்குக் காரணம் இருக்கத்தான் வேண்டும்.

இது எப்படியாயினும் அந்த யோசனை மறுக்கப்பட்டதும், தமிழ்த் தலைவர்கள் அதை [illegible]

மறந்துவிட்டு ஒற்றையாட்சி அரசாங்கத்தில் சேர்ந்து ஒத்துழைத்ததை டோரி அவர்களே ஒப்புக்கொள்ளுகின்ருர். இலங்கைப் பிரஜா உரிமைச்சட்டம், இந்திய-பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம், வாக்காளர் இடாப்பிலிருந்து இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியத் தமிழரின் பெயர்களை நீக்கிய முறை முதலியன இங்கு தமிழருக்கு, பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களின் நல்லெண்ணத்திலிருந்த நம்பிக்கையைப் பெரிதும் குறைத்தது.

இதையெல்லாம்விட சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக இருக்குமென்று அரசாங்க சபையில் 1944 ம் வருடம் தீர்மானம் நிறைவேறிபலவருடம்அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதை, திடீரென 1956-ம் வருடத்தில் பீரங்கிமுனையில் மாற்றி 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தை நிறைவேற்றிய காரியத்தைப்பற்றி ஏன் டோரி அவர்கள் ஒன்றுமே கூறவில்லை. அவர் இதை மறந்துவிட்டாரா? அந்த வகுப்புவாத நடவடிக்கையை இரு பெரிய சிங்களக்கட்சிகளும் ஆதரித்து நிறைவேற்றியது சரியா? சிறுபான்மை சமூகத்துக்குஇருந்துவந்த மொழி அந்தஸ்து வாக்குரிமையில் கை வைத்தது ஜனநாயகமா? இவை அடிப்படை உரிமைகளல்லவா? இதில் கைவைத்ததால்தானே, ஐக்கியதேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இவற்றிலிருந்து பல தமிழ்த் தலைவர்கள் வெளியேற நேரிட்டது? சிறுபான்மை சமூகத்தினர் பாதிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் பெற விரும்புவது வகுப்புவாதமாகுமா?

மற்ற பகுதிகளில் வாழும் தமிழர் வடமாகாணத்துக்கு வரவேண்டுமென்று கேட்கும் யோசனையை தமிழரே விரும்பவில்லையென்றும், தங்கள் எதிர்கால சுபீட்சம் [illegible] அன்றி, ஒத்[illegible]லும் கூட்டாகச்

சேர்ந்து வாழ்வதிலும்தான் தங்கியிருப்பதாக தமிழ்சமூகத்தவர் கருதுவதாகவும், டோரி டி சூஸா சரியாகக் குறிப்பிடுகின்ருர். ஆனுல் தமிழர் இந்நாட்டில் மீண்டும் மானத்துடன் சரிநிகர் சமானமாகவாழ வழி என்ன என்பதே கேள்வி.

ஒரு மாவட்ட சபையைக் கூட கொடுக்க மறுப்பவர்கள் தனித்தமிழ் நாட்டைக் கொடுக்க எந்த வகையிலும் விரும்புவார்களா? மாட்டார்களென்பது தீவுப்பகுதி பிரதிநிதிக்கும் தெரியாதிருக்க முடியாது. ஆனுல் இந்நாட்டில் தமிழருக்கு ஜனநாயகத்தின் பெயரால் செய்யப்பட்டுவிட்ட அநீதிகளை நீக்கவும், பறிக்கப்பட்ட உரிமைகளை (புதிய உரிமைகள் அல்ல) திருப்பி வழங்கவும், நாட்டின் மேலான நன்மையை முன்னிட்டு ஐ. தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும் சம்மதிக்குமா? டோரி அவர்கள் இதுபற்றி ஏன்ஒன்றும் கூறவில்லை?

இந்நாட்டில் தமிழர் ஏற்கனவே அனுபவித்து வந்த மொழி உரிமையை மீண்டும் வழங்கினுல் பெரும்பான்மைச் சமூகத்துக்கு என்ன நஷ்டம்? அடுத்த தேர்தலில் தாங்கள் வெற்றிபெற முடியாதோ என்று அக்கட்சிகள் பயப்படலாம்.

ஆனுல் எல்லா முக்கிய கட்சிகளும் சேர்ந்து தாங்கள் முன்னர் செய்துவிட்ட பெரிய இமாலயத்தவறைத் திருத்திக்கொள்வதென்றும், இந்நாட்டில் இரண்டாவது பெரிய சமூகமாக வாழும் தமிழருக்கு அவர்கள் ஏற்கெனவே அனுபவித்துவந்த உரிமையை வழங்கவேண்டுமென்றும், அரசியல் ஞானத்துடனும் தேசாபிமானத்துடனும் தீர்மானிப்பதாயின் இந்நாடு எவ்வளவு மேலாக முன்னேறும்? இழந்த உரிமையைப் பெற மனமுடைந்த சிறுபான்மையினரான தமிழர் எடுக்கும் முயற்சிகளை வகுப்புவாதம் என்று குற்றம் சுமத்தி பயமுறுத்துவது நியாயமாகுமா?

ஐ. தே. கட்சி சுதந்திரகட்சி முதலியவற்றில் தமிழர் மீண்டும் சேரவேண்டுமென்கிருர் டோரி. மொழிவிஷயமாக செய்யப்பட்ட அந்த 'இமாலய வகுப்புவாதத் தவறை மாற்றிக்கொள்ள அக்கட்சிகள் சற்ருவது முன்வந்தால் தமிழரும் மானத்துடன் அவற்றில் மீண்டும் சேரவும் ஒத்துழைக்கவும் வழிபிறக்க முடியும்.

### ஒரு கண்ணோட்டம்

# கொழும்பில் நடைபெறும் 'சியவச' கல்வி நூற்ருண்டு விழா கண்காட்சி

'சியவச' கண்காட்சி மூலம் கொழும்பு மாநகரம் களை கட்டத்தொடங்கிவிட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மாணவமணிகள் தற்போது கொழும்பு ருேயல் கல்லூரியில் நடைபெறும் 'கல்வி நூற்ருண்டு விழாக் கண்காட்சி'யைக் காணத்திரண்டு வருகிருர்கள்.

இலங்கையின் கல்வித் துறையின் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இனி வருங்காலத்தையும் தெளிவுபடுத்திக்காட்டவல்ல வகையில் இக் கண்காட்சி வெகு சிறப்பாக அமைந்துள்ளது.

அழகாக அலங்கரிக்கப்பட்ட ருேயல் கல்லூரி வளவு முழுவதும் வர்ண விளக்குகளாலும், அலங்காரப் பந்தர்களாலும், காட்சிக்கென ஒழுங்குசெய்யப்பட்ட காட்சிப் பொருட்கூடங்களாலும் பொலிவு பெற்று விளங்குகிறது அறிவுச்சுடர் சுவாலைவிட்டு எரிவதுபோன்று ருேயல் கல்லூரி முகப்பில் அமைக்கப்பட்டுள்ள 'சுடரொளி' எம்மை வாசலில் வைத்து வரவேற்கிறது. முகப்புமண்டபத்தில் 'இலலித கலைகள்' என அழகாக எழுதப்பட்டு அங்கு புராதனக்கலைச் சிற்பங்களும், ஓவியங்களும், வடிவங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கல்வித்துறையின் ஒவ்வொரு நுண்ணிய அம்சங்களும் வெவ்வேறு அறைகளில் அழகுததும்பச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிற்கும் கால எல்லைகளையும் தொகைகளையும் தெளிவுபடுத்தும் புள்ளிவிபரங்களும் வரைபட விளக்கக்கோடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இனிய சுபாவமும் புன்முறுவலும் கொண்ட கண்காட்சி உதவியாளர்களும் விளக்கம் சொல்பவர்களும் பார்வையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று உரிய விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள்.

### கல்வித்திணைக்களம்

இக்கண்காட்சியில் கல்வித் திணைக்களமே முக்கிய பங்கினை எடுத்துள்ளது. இத் திணைக்களம் தனது பாடப்... படுகின்றன. பிறமொழி நூல்களின் மொழிபெயர்ப்புகளேயாயினும் பாரதி சொன்னதுபோல, 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் என்றும் இறவாத தமிழ்மொழியில் பெயர்த்தல்வேண்டும்' என்பதற்கொப்ப எமது கல்வி வெளியீட்டுத் திணைக்களம் செயற்பட்டிருப்பது பெருமைப்படவேண்டியதே.

### பரீட்சைப்பகுதி

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தனக்கெனத் தனியானதோர் காட்சிச் சாலையை அமைத்துள்ளது. நாடுபூராவும் உள்ள பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஸ்தானங்களை ஒழுங்கு செய்த, விண்ணப்பங்களை வழங்குதல், வினுத்தாள்களைத் தயாரித்தல்(இரகசியமுறையில்), திருத்தப்பட்டவற்றை ஒன்று சேர்த்தல் என்பன போன்ற இன்னேரன்ன கருமங்களைச் சம்பந்தப்பட்ட, திணைக்களக் கிளைத் தலைவர்கள் செய்யும் விதம் அவற்றுக்குப் பயன் படுத்தப்படும் கருவிகள் என்பன வற்றை

உயருமே தவிர குறையாது. வாழ்க்கைச்செலவுஉயர்வைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் நிதிஅமைச்சரும் அரசாங்கமும் மார்க்கம் கண்டு பிடித்திருந்தால் அரசாங்க ஊழியருக்குச் சம்பளஉயர்வு கொடுக்கவேண்டிய அவசியமும் தனியார்துறையினர் சம்பளஉயர்வு கோரவேண்டிய அவசியமும்நேர்ந்திருக்காது

...ளிக்காமல், தனியார்துறை ஊழியர், தோட்டத்தொழிலாளர் ஆகியோரின் சம்பள உயர்வு விஷயத்தில் தனியார் துறை முதலாளிமார்களை நிதிஅமைச்சர் அழைத்துப் பேசி விரைவில் ஒருநல்லமுடிவைச் செய்வது தனியார் துறைக்கும் அரசாங்கத்துக்கும் நல்லது.

கூறியிருந்திருப்பின் அது பல விதங்களிலும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். இப்போது இந்தக் கட்டுரையை நான் எழுதவேண்டிய அவசியமும் இருந்திராது

...குக் காரணம் இருக்கத்தான் வேண்டும்.

இது எப்படியாயினும் அந்த யோசனை மறுக்கப்பட்டதும், தமிழ்த் தலைவர்கள் அதை அடியோடு

வரவேண்டுமென்று கேட்பட்ட காட்சிப் பொருட்கும் யோசனையை தமிழரே கூடங்களாலும் பொலிவு விரும்பவில்லையென்றும், பெற்று விளங்குகிறது அறி தங்கள் எதிர்கால சுபீட்சம் வுச்சுடர் சுவாலைவிட்டு எரி பிரிவினையால் அன்றி, ஒத் வதுபோன்று ஞேயல் கல் துழைப்பிலும் கூட்டாகச் லூரி முகப்பில் அமைக்கப்

## ''ஸ்கந்தாவின் சரித்திரத்தில் புதிய சகாப்தம் ஆரம்பம்''

### — உடுவில் எம். பி.

உடுவில், சனி

''இக்கல்லூரியின் சரித்திரத்தில் இன்றிலிருந்து புதிய சகாப் தம் உருவாகப் போகின்றது. கடந்த சகாப்தம் மும்மணிகளான டாக்டர் சுப்பிரமணியம், ஓறேற்றர் சுப்பிரமணியம், வி. சுப்பிரமணியம் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டது. இவர்களின் காலம்முடிவுறும் இவ்வேளையில் புதிய சகாப்தம் ஒன்று உருவாகப்போகின்றது நேடுஜி, படேல் போன்ற தலைவர்களைப் போல ஒறேற்றர் சுப்பிரமணியமும், வி. சுப்பிரமணியமும் இக்கல்லூரியை ஆண்டுள்ளனர்.''

ஸ்கந்தவரோதயா கல்லூரியின் ஒய்வுபெறும் அதிபர் வி. சுப்பிரமணியத்துக்கு மேற்படி கல்லூரியின் பெற்ரோர் ஆசிரிய சங்கத்தினர் நடத்திய பிரியாவிடைக் கூட்டத்தில் பேசிய உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினூர்

வண்ணூர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் பேசுகையில், ''திரு. சுப்பிரமணியம் உடுக்கும் உடையும் வெள்ளை; அவரது உள்ளமும் வெள்ளை. தூய்மையுடன் பணியாற்றி ஒய்வு பெறும் இவர் ஒரு சிறந்த ஞானகுரு'' என்ரூர்.

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில், ஆசிரியர்கள் ஊதியத்திற்காக மட்டும் ஏற்பட்டவர்களல்லர். டாக்டர்களையும், தொழிலதிபர்களையும் குறிப்டாக நற்பிரஜைகளை நாட்டில் உருவாக்கும் அரும்பணியை-சேவையைச் செய்பவர்கள் ஆசிரியர்கள்தான் என்ரூர்.

கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில், கல்லூரியின் வளர்ச்சிக்காக தமது உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் கொடுத்து இரவு பகலாக உழைத்து விஞ்ஞானகூடம், ஆய்வு கூடங்களைத் தோற்றுவித்தவர் திரு. சுப்பிரமணியம் தான் என்ரூர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. சபாரத்தினம், கலாநிதி ஆ. நடராசா, வித்துவான் சி. ஆறுமுகன், திரு. சி. பூதத்தம்பி, திரு. மா. நடராசா, திருமதிகள் வரதராசா, தம்பையா ஆகியோர் உட்பட பலரும் கூட்டத்தில் பேசினர்.

மேற்படி கல்லூரி துணை அதிபர் திரு. கே. சிவகுமாரன் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது.

மன்ஞர்-விடத்தல்தீவு

## புதிய ஜே பி

நல்லூர், வெள்ளி

மன்ஞர் விடத்தல்தீவைச் சேர்ந்த திரு. அகுஸ்தீன் இராசேந்திரம் இப்பகுதிக்குப் புதிய சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார். கிராம முன்னேற்றச் சங்கம், சமூகசேவா சங்கம், சனசமூக நிலையம், கிராமசபை ஆகியவற்றின் தலைவராக இருந்த இவர், இப்பொழுது ஆஸ்பத்திரி மேற்பார்வையாளராசக் கடமையாற்றி வருகின்ரூர்,

கிராம முன்னேற்றப் பயிற்சி வகுப்பில் முதன்மை பெற்று பத்திரமும் பெற்றுள்ள இவர் விடத்தல்தீவு டெலிபோன் சேவை, தூல் நிலையம், மீன்பிடி வசதிகள், வீடில்லா தோர்க்கு வீட்டுத் திட்டம், மருதமடுக்குளம், வைத்தியசாலை பஸ்பிரயாண வசதிகள் ஆகியன திறம்பட அமைய அயராது உழைத்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாரபட்சமும் பலாத்காரமும் பிரிவினைக்குத் தூபமிடும்

### ஜேம்ஸ் ரி. இரத்தினம்

(நேற்றைய தொடர்ச்சி)

தூரதிருஷ்டியற்ற மந்திரியார் ஈரியகொல்லையைக் கொண்ட அரசாங்கம், பாரபட்சமான தன்மையின் காரணமாகவும், துன்புறுத்தல் காரணமாகவும் தற்போது நிலவும் அதிருப்தியைத் தொடர்ந்து தமிழர்களையோ அல்லது பிரதேசங்களையோ சிங்கள மயப்படுத்த எடுக்கப்படும் எத்தகைய பலாத்கார முயற்சியும் நிதானசிந்தையும்படைத்தவர்களையும்கூட பகைத்துக் கொள்வதாகவும், ஆருப் புண்களை உண்டுபண்ணுவதாகவுமே முடியும். விரக்தியை உண்டுபண்ணி ஒரு தனித்தமிழ் ராச்சியத்துக்கான இயக்கத்துக்குத் தான் தூபம்வார்க்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்கும் பிரச்னை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களது இன்றைய நிலைமையோடு கலக்கப்பட்டுள்ளது. கலங்கிய குட்டையில் மீன்பிடிப்பது தேசிய விரோத சக்திகளுக்கும் மூர்ககர்களுக்கும் நல்லதெனப்படலாம், வரலாற்ருசிரியர்களாக அவதாரமெடுத்து, யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட வகுப்பார் பூர்வீகத்தில் சிங்களப் பௌத்தர்களே என்றும், நினைக்கின்ற சில அரசியல் பிக்குகளும் இவர்களுடன் சேர்ந்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் பழம் பௌத்த சின்னங்கள் தமிழ்ப் பௌத்தர்களுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கலாம் ஆனுல் இந்தக் கருத்தை ஒதுக்கிவிட்டனர்.

### ஒருவருக்குமட்டும் சொந்தமல்ல

பௌத்த சங்கத்தைச்சேர்ந்த சில குருமார்கள் வகுப்புவாத அரசியலில் குதிப்பது அத்தியாவசியம் எனத் தீர்மானித்துள்ளமை துரதிர்ஷ்டமேயாகும். பௌத்தம் சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல.

ஒருவர் பௌத்தராக மதம் மாறும் அதே வேளையில் அவர் ஓரு சிங்களவராகவும் மாறிவிடுவதில்லை. ஒருவர் ஒரு பௌத்த குருவாக மாறும்பொழுது அவர் உண்மையிலேயே ஓர் உலகப் பிரஜையாக மாறிவிடுகிருர். இலங்கையில் பௌத்தத்தின் நீள்நெடிய வரலாற்றில். நாம் சங்கத்தின் பல்வேறு தோஷ நீக்கங்களையும் சீர்திருத்தங்களையும் கண்டுவிட்டோம். சாதி வேறுபாடுகளிலிருந்தும், குறுகிய வாதப் போக்குகளிலிருந்தும் (வகுப்புவாதத்திலிருந்தும்கூட) சங்கத்தை தோஷ நீக்கம் செய்து, மஹான்புத்தரின் மனுதாபிமான உணர்வினுல் அதற்கு வலிமையூட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது.

புத்தரின் இலங்கை விஷயங்கள் சம்பந்தமான ஐதீகத்தை டாக்டர் பரணவிதாரண தவிடுபொடியாக்கிவிட்டார். அதேபோல் பௌத்தத்தின் பாதுகாப்பிடமாக இலங்கை இருக்க வேண்டுமெனப் புத்தர் கட்டளையிட்டுச் சென்ருர்என்ற ஐதீகமும் தகர்க்கப்படவேண்டும்.

உலகைக் காவல்புரியும் பொலிஸகாரர்பணி தங்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கர்கள்கற்பனை செய்து கொள்வதுபோல், நமதுமுன்னைய ஆட்சியாளரை ''ஆண்டவனின்சொந்தமான ஆங்கிலேயர்கள்'' என்று வர்ணித்த பழைய சாம்ராஜ்யவாதப் புளுகு மூடையைப்போல் இதுவும் மோசமானதேயாகும். சமீபத்தில் பௌத்தத்துக்கு மத மாற்றஞ்செய்யப்பட்டவர்களில் எவரேனும் சியாம் நிக்காயாப் பிரிவைச் சேர்ந்த ஓர் பௌத்த குருவாக வருவாரா என்பதைப் பார்த்து விடுவதற்காகக் காத்துக் கிடக்கிறது யாழ்ப்பாணம். இது நடக்கு மானுல் யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட வகுப்பாரது விடிவு விமோசனத்தையும், இலங்கையில் பௌத்தத்தின் விமோசனத்தையும் அது கோடிட்டுக் காட்டும்என்பதில்சந்தேகமில்லை. வரலாற்று ஆராய்ச்சிக்கான நேரமல்ல இப்போது. ஆனுல் இதைமட்டும் புரிந்துகொள்ளவேண்டும்; தங்களைச் சிங்களவர்கள் என்று அழைததுக்கொள்ளும் தெற்கைச் சேர்ந்த மிகப் பெரும்பான்மையான மக்கள் ஒருகாலத்தில் கலப்பற்ற தூய தமிழர்களாக இருந்தவர்களாவர். அல்லது விமர்சனத்தின் மயக்கத்துக்குஅப்பால் வைத்துச் சொல்வதானுல் அவர்கள் திராவிடர்கள் தென்னிந்தியாவைச்சேர்ந்த மக்களும் இலங்கையைச் சேர்ந்த மக்களும் அடிப்படையில் குட்டையானவர்கள், கொழுத்துத் திரண்ட நாசியைக் கொண்டவர்கள். நீண்ட தலையமைப்பு உடையவர்கள், அத்துடன் காலத்துக்குக்காலம் அங்குமிங்குமாக ஆரியரதும் பூர்வீக வாசிகளதும் கலவை தலை காட்டியது. ஆனுல் வடஇந்தியாவைச் சேர்ந்த இனங்களிலிருந்து அவர்கள் முற்ருக வேறுபட்டவர்கள் என்பது நிச்சயமாகவும் தெளிவாகவும் உள்ளது. நாம் எவ்வளவு தான் மாறுவேடம் பூண முயற்சித்தாலும் நமது முகங்களே நம்மைக் காட்டிக் கெடுத்து விடும்.

இப்பொழுது சிங்கள வகுப்புவாதத்துக்கு வக்காலத்து வாங்கக் கிளம்பியிருக்கும், ஒரு சிறந்த கல்விமானுன கலாநிதி சி. ஈ. தொடக்கும்புரை ''யாழ்ப்பாணத்தின் ஹரிஜனங்கள் மட்டுமல்லாது வேளாளர்கள்கூட'' சிங்களவர்களே என்ற ஓர் சுவாரஸ்யமான கண்டுபிடிப்பைமே மாதம் 25-ந் திகதிய ''சிலோன் டெய்லி நியூஸ்'' பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். சிங்களவர்களில் மிகப் பெருவாரியானோர் தமிழர்களே அல்லது ன்இனும் அறுதியாகக் கூறுவதானுல் அவர்கள் திராவிடர்கள் என்ற நம்முடைய கூற்றுக்குக் கிளம்பியுள்ள எதிர்வேட்டு தான் இது. இது எங்கே இட்டுச் செல்கின்றது? சிங்களவர் என்ருகட்டும் அல்லது தமிழர் என்ருகட்டும் எப்படி வேண்டுமானுலும் அழையுங்கள். இலங்கையின் ஜனத் தொகை ஒன்றுதான். ஒரே இனத்ததுதான். மனித கதை சாஸ்திரத்தின்படி இது வே யதார்த்தம் - உண்மை. நமது இனரீதியான வரலாற்று ரீதியான மொழி ரீதியான வருங்கால ஆராய்ச்சிகள் இந்த அடிப்படையிலிருந்தே தொடர வேண்டும். நீள் நெடுங்காலமாக தனித்ததொரு பூகோளப் பகுதியாகவிருந்த இலங்கையும், தென்னிந்தியாவும், திராவிட மொழி பேசும் இனத்தவர் வாழும் ஒரு பகுதியாக அமைந்திருந்ததென்பது உடலியல் மனித கண க்ஸ்திர வல்லுனர்களது நவீன முடிவாகும். நமது அனுபவங்களும் இதையே உறுதிப் படுத்துகின்றன. இப்பகுதிகளில் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் மட்டுமே நாம் பனியனும் துணியும் அணிகிரேம் என்பதை நாம் அறியோயா? இன்றும் நாம் அவதானித்துள்ளபடி நமது தோற்றச் சாயலும், தென்னிந்தியருடைய தோற்றச்சாயலும் ஒரே மாதிரியாய், அதே நேரம் வடஇந்தியர்களுடையதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் உள்ளன. இலங்கையில் ஓர் அரசியல் குடியேற்றமோ அல்லது வட இந்தியக் குடியேற்றமோ இருந்ததற்கான எத்தகையதொரு புதைபொருள் ஆதாரமும் கிடையாது.

(தொடரும்)

களைச் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள்.

### கல்வித்திணைக்களம்

இக்கண்காட்சியில் கல்வித்திணைக்களமே முக்கிய பங்கினை எடுத்துள்ளது. இத்திணைக்களம் தனது பாடப் புத்தக வெளியீடுகள், சஞ்சிகைகள் அனைத்தையும் மும்மொழிகளிலும் காட்சிக்கு வைத்துள்ளது 1869-ம் ஆண்டு தொட்டுப் பாடசாலைகளிற்பயன்பட்டுவந்த நூல்களுட் சில இக்காட்சியிலுள்ளன. தொல்சுவடிச் சாலையிலுள்ள சில நூல்களின் ஒளிப்படப் பிரதிகளும் உள்ளன.

### - நெல்லை க. பேரன் -

பல்வேறு பாடங்களுக்குமுரிய பாட நூல்கள் வளர்ச்சிபெற்று வந்தமையும், வேற்றுநாட்டு ஆங்கில நூல்களின் இடத்தைச் சுய மொழி நூல்கள் கைப்பற்றியுள்ளமையும் காட்டும்வண்ணம் நூல்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளண. அரசாங்கம் தயாரித்த பாடசாலை நூல்கள் காட்சியில் தனியாக வைக்கப்பட்டுள்ளன. 1956 ஜூலையில் கல்வி அமைச்சின்கீழ்'தன்மொழித் திணைக்களம்' என்ற பெயருடன் நிறுவப்பட்டு, இப்போது 'கல்வி வெளியீட்டுத் திணைக்களம்' என்ற பெயருடன் இயங்கிவருகிறது. இத்திணைக்களப் பணிக்குழுவில் 110 பட்டதாரிகளும் 164 பிறரும் அடங்கிய ஓர் அலுவலர்குழு நூலாக்கம், விநியோகம் ஆகிய துறைகளில் திணைக்கள ஆணையாளருக்குத் துணை புரிகின்றது. 1955-க்குப் பின்னர் இத்திணைக்களம் 103 கலைச்சொல் தொகுதிகளையும், 162 பள்ளிப்பாட நூல்களையும் 249 உயர்தர பல்கலைக்கழக நூல்களையும் வெளியிட்டுள்ளது. மேற்படி நூல்களாக வந்த பிரதிகளின் மொத்த எண்ணிக்கை 18 749,727. இவற்றின் பெறுமதி ரூபா 3,011,269. இதுவரை விற்பனை செய்த நூல்களின் தொகை 12,803,580. இந்நூல்கள் அனைத்தையும் கண்காட்சியில் காணக்கூடியதாகவுள்ளது. இந்நூல்களைக்காணக் காணத் தாய்மொழியில் ஏன் விஞ்ஞானம் போதிக்க முடியாதென்ற உற்சாக உணர்வு ஏற்படுகிறது. தாவரவியல், விலங்கியல், பௌதிகம், இரசாயனவியல், பிரயோக கணிதம் என்பன போன்ற பல்துறை இரசாயன நூல்களும் தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் அழகாக அச்சிடப்பட்டு நல்ல முறையில் 'பைன்ட்' செய்து காணப்படுகின்றன ...தல் என்பன போன்ற இன்னோரன்ன கருமங்களைச் சம்பந்தப்பட்ட, திணைக்களக் கிளைத் தலைவர்கள் செய்யும் விதம் அவற்றுக்குப் பயன் படுத்தப்படும் கருவிகள் என்பனவற்றை படங்கள் மூலம் தெளிவாக விளங்கப்படுத்தப் பட்டுள்ளது. புதிதாக 'ஸ்டேட் எஞ்சினியரிங் கார்ப்பரேஷன்' தருவித்துள்ள பத்திரங்களை அச்சடிக்கும் கம்பியூட்டர் சாதனக் கருவிகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் புகைப்படங்கள் மூலமும்விளக்கக் குறிப்புகள் மூலமும் தெளிவு படுத்தப் பட்டுள்ளன. சுருக்கமாகச் சொன்னுல் பரீட்சைப் பகுதியே எமது கண்முன்னுல் வந்து நிற்பது போலக் கண் காட்சிக் கூடம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

(நாளை முடியும்)

## பகிரங்க வேண்டுகோள்

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தார்சைவ ஆலயங்களில் சினிமா, டப்பா சங்கீதங்களை ஒலிபரப்புவதைக் கண்டித்தும் சதுர்க்கச்சேரிகள் போன்ற கேளிக்கைகள் நிறைந்த நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்வதைவிடுத்துப் பரதநாட்டியம், தெய்வீக மணம் நிறைந்த பக்தி பாடல்கள் சமயச் சொற்பொழிவுகள் இலக்கிய உபந்யாசங்கள் முதலியன நடைபெறச் செய்யவேண்டுமெனவும் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை வெளியிட்டுள்ளனர்

## தனியார்துறை...

கள், வருத்தங்கள், மற்றும் பிரசவம், இறப்பு போன்ற செலவுகளுக்கு இந்தக் காப்புறுதி உதவி அளிக்கக் கூடியதாய் இருக்கும்.

சமூக சேவைப்பகுதி டைரக்டர் டாக்டர் ஆர். எல். திருச்செல்வம் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஒன்று இந்த அடையாள மசோதாவை தயார்செய்தது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி. உட்பட 8 பேர் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர். சமூக சேவைக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அமைத்து அது அமைச்சரின் கீழ் விசேட சபையின் நிர்வாகத்துடன் இயங்க வேண்டுமென்று இந்தச் சபை சிபார்சு செய்துள்ளது. அந்தச் சபையில் ஊழியர்கள், முதலாளிமார், அரசாங்கப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org